# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் - 78 சித்திரை - வைகாசி Email : theepamlink@gmail.com TP: 026 2221022 / 026 2054362 Rs. 40/=




## ஆயரின் ஆசீச் செய்தி

இறை இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
உயிர்த்த ஆண்டவரின் இனிய பெயரில் வாழ்த்துக்கள்!

கடினமான பொருளாதார சவால்களுக்குள் நாம் கடந்து செல்கிறோம். இந்நிலையில் நாம் ஆன்மீக ரீதியிலும் சமூக ரீதியிலும் இணைந்திருப்பது இன்றியமையாததாகும்.

கடந்த சில வாரங்களாகவும் மாதங்களாகவும் எமது நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்களே. அரசியல்வாதிகளும் நாட்டுத் தலைவர்களும் பொறுப்புக்கூறவேண்டிய காலமிது. அதேவேளை பலசமயத் தலைவர்களும் ஒருமித்த கருத்தோடு அனைவருக்குமான நீதி, நல்வாழ்வு, சமாதானம் எனும் பாதையில் இணைந்து பயணிக்கத் தவறிவிட்டார்கள். இதனால் மிஞ்சியது முரண்பாடுகளும் குரோதங்களும் பிரிவுகளுமே. சமயங்களுக்கிடையே முரண்பாடு, சமூகங்களுக்கிடையே தீவிரப்போக்கு, இனங்களுக்கிடையே கருத்துமோதல்கள். இவற்றை தமக்கு சாதகமாக்கி அரசியல்வாதிகள் தம்மைப் பலப்படுத்திக்கொள்கிறார்கள். இவற்றிலிருந்து விடுபட மாற்றத்திற்கான அறிகுறிகளும் சூழ்நிலையும் உருவானாலும் அனைவரும் இந்நாட்டு மக்கள், மதிக்கப்பட வேண்டியவர்கள், சமத்துவமாகக் கணிக்கப்பட வேண்டியவர்களென எண்ணி செயல்படும் மனநிலை அரசியல் வாதிகளிலும், சமயத் தலைவர்களிலும், அனைத்து குடிமக்களிலும் உருவாகும்வரை முரண்பட்ட சூழ்நிலைகள் தொடர்ந்தவண்ணமே இருக்கும். எனவே மாற்றம் வரவேண்டும. அம்மாற்றம் என்னிலிருந்து தொடங்க வேண்டும்.

தவக்காலம் முடிந்து பாஸ்கா காலத்தினுள் பயணிக்கின்றோம். தவக்காலத்தில் பல பக்தி முயற்சிகள், சிலுவைப்பாதைத் தியானங்கள், ஒப்புரவு வழிபாடு, பாதயாத்திரை என பல ஒழுங்குகளைச் செய்த குருக்களுக்கும் இவர்களுக்கு ஒத்துழைத்த துறவற சகோதர சகோதரிகள் பொதுநிலை நம்பிக்கையாளர் களுக்கும் எமது பாராட்டுக்கள். எதிர்வரும் 29ம் திகதி பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தல பெருவிழா. இதனை முன்னிட்டு 28ம் திகதி செபமாலைப் பவனி ஒழுங்கு செய்யப்படுகின்றது. நாட்டுச் சூழ்நிலை சீராகும் பட்சத்தில் இப்பவனி திட்டமிட்டபடி நடைபெறும். அதேபோல ஆலய திருவிழாக்கள் தொடர்ச்சியாக நடைபெறும்.

ஜூன் மாதம் 13ம் திகதி பதுவை நகர் புனித அந்தோனியார் பெருவிழா. ஏப்ரல் மாதம் 23ம் திகதிமுதல் மே மாதம் 3ம் திகதி வரை கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித், ஒன்பது ஆயர்கள், குருக்கள், 2019 பாஸ்கா ஞாயிலு குண்டுவெடிப்பில் காயப்பட்டவர்களுள் தெரிவுசெய்யப்பட்ட சிலரோடு இத்தாலிக்குப் பயணம் மேற்கொண்டோம். ஏப்ரல் 25ம் நாள் உரோமையில் புனித பேதுரு பேராலயத்தில் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. திருப்பலி நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் வருகைதந்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் சந்தித்தார். இது அவர்களுக்கு மறக்கமுடியாத அனுபவமாகிது. மே மாதம் 1ம் திகதி பாதுவா நகரில் புனித அந்தோனியார் திருத்தலத்தில் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றினோம். இத்திருப்பலிகளுக்கு மூவாயிரத்திற்கும் அதிகமான இத்தாலி வாழும் இலங்கையர்கள் வருகை தந்திருந்தார்கள். பதுவை அந்தோனியாரின் பரிந்து பேசுதலை எமது குடும்பங்களுக்காகவும் மறைமாவட்டத்திற்காகவும் இலங்கை நாட்டிற்காகவும் வேண்டுவோம்.

மரியன்னையின் வணக்கமாத நிறைவில் பயணிக்கிறோம். தனது விண்ணேற்போடு தன் பணி முடிந்துவிட்டது என எண்ணாமல் மரியா இன்னும் எமக்காகவும் உலக மீட்புக்காகவும் பரிந்து பேசுகின்றார். அவரது பெயரில் பல ஆலயங்கள், நிறுவனங்கள், துறவற சபைகள் எனப் பல. மரியா தனது காட்சிகள் மூலமாக மக்களுக்கு செய்திகளையும் இறைப் பக்தியையும் வழிகாட்டல்களையும் தருகின்றார். செபிப்பதற்கு மரியா எமக்குத் தந்த சிறப்பான ஆயுதம் செபமாலையாகும். நாளாந்தம் தனித்தோ, திருக்குடும்பமாகவோ, பங்குச் சமூகமாகவோ செபமாலை செபிப்பதன் மூலமாக இறையாசீரையும் மரியன்னையின் பரிந்து பேசுதலையும் வழிகாட்டலையும் பெறுகின்றோம்.

இன்றைய பொருளாதார சூழ்நிலையின் மத்தியில் எமது மறைமாவட்ட தூரநோக்கான ஆன்மீகம், கல்வி, சமூகப் பணி மூன்றையும் நாம் புதுப்பிக்கின்றோம். ஒவ்வொரு பங்கிலும் கல்விக்கான குழு, சமூகப் பணிக்கான குழு உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம் நாம் சமூகத்தின் தேவைகளை இனம்கண்டு பணிசெய்யலாம். அது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. உணர்ந்து செயல்படுவோம்.


இறைவன் உங்களை தனது அன்பிலும் பாதுகாப்பிலும் வைத்துக்காப்பாராக.

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

## செபிப்போம் வாழ்த்துவோம்



**அதிவண**
**ஆயர். J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
39வது ஆயர்த்துவ நினைவு நாள்
(07 வைகாசி 1983)



**அதிவண ஆயர்.**
**கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
36வது குருத்துவ நினைவு நாள்
(21 வைகாசி 1986)

## இறைஇரக்க திருத்தலத்தின் 21வருட திருவிழா

திருகோணமலை அலஸ்தோட்டம் இறை இரக்கத் திருத்தலத்தின் 21வது வருடாந்த திருவிழா 18.04.2022 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இளைஞர் ஆண்டை முன்னிட்டும், இளையோரை மைய மாகக் கொண்டும் திருவிழா திருப்பலிக்கான கருப்பொருட்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. 20.04.2022 புதன்கிழமை மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அருள் அடையாளங்கள் வழங்கப்பட்டது. திருவிழா திருப்பலியானது 24.04.2022 அன்று மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி T. கிங்ஸ்லி றொபட் அவர்களின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை பங்கு மக்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் வைத்து பரிசில்களும் வழங்கப்பட்டன.







## தம்பலகமம் புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் பணிமனை திறப்பு விழா

தம்பலகமம் புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் புதிய பணிமனை திறப்பு விழாவானது 15.05.2022 மறைமாநில ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் ஜேம்ஸ் அவர்களும் கலந்து கொண்டார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறை அருளினாலும் திருத்தூது ஆட்சிப்பீடத்தின் தயவினாலும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆகிய நான் நம் மறைமாவட்டத்திலுள்ள சகல அருள்பணியாளர்கள் துறவற சகோதர சகோதரிகள் பொதுநிலை நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் இறைவனின் அருளும் ஆசீரும் வேண்டி எழுதும் 2022ம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணி மடல்**

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இறையாசீரும் வழிகாட்டலும் உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிலும் மிளிர வாழ்த்துகின்றேன். தவக்காலத்தின் ஊடாக கடந்து செல்கின்றோம். இது மனமாற்றத்தின் காலம், ஒப்புரவின் காலம், எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி இறைவனோடும் அடுத்திருப்பாரோடும் ஒப்புரவாகி சான்று பகர்வோம்.

கடந்த இரண்டு வருடங்களாக கொவிட் தொற்றால் உலகமே பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நாம் பல துன்பங்களுக்கு ஆளாகியிருந்தோம். நோயினால் பீடிக்கப்பட்டு சுகமடைந்தவர்கள், சொந்தங்களை இழந்தவர்கள் என பல தடைகளையும் தாண்டி மீண்டெழும் இத்தருணத்தில் எமது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அனைவரையும் பாதித்துள்ளது. இந்நிலையில் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து இறையாசீரோடு மீண்டெழ முயல்வோம்.

2022ம் ஆண்டினை நாம் "இளையோர்" ஆண்டாகப் பிரகடனப்படுத்துகின்றோம். "இளையோரே.... கிறிஸ்துவுக்காக எழுந்து வா" எனும் தொனிப்பொருளில் இளையோர் ஆண்டிற்கான நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன. இளையோர் தமது ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தவும், இறையழைத்தலை உணரவும், சமூகப் பணிகளில் ஈடுபடவும் உதவியாக இவ்வாண்டின் செயல்பாடுகள் அமைந்திருக்கும். கத்தோலிக்க இளைஞர் பேரவையின் மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை மதுராங்கன் குரூஸ் இளையோருக்கென இவ்வருடத்திற்கான திட்டங்களை வகுத்துள்ளார். அவருக்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுப்போம். ஆன்மீகம், ஆற்றுப்படுத்தல், வலுவூட்டல், கலைத் திறமைகளை வளர்த்தல் போன்ற முக்கிய விடயங்களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு இளையோருக்கான இவ்வருட நிகழ்வுகள் நடைபெறும். இளையோரின் காலம் வரையறுக்கப்பட்டதே. ஆயினும் முழுமனித வளர்ச்சியில் இக்காலம் மிகவும் உன்னதமானது. கத்தோலிக்க இளைஞர் பேரவை ஒவ்வொரு பங்கிலும் உண்டு. இவ்வருட இறுதிக்குள் கத்தோலிக்க இளைஞர் பேரவை சிறப்பாக செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

"ஆயர்கள் மாமன்ற 2022" க்கான மறைமாவட்ட சிறப்பு அமர்வு விரைவில் நடைபெறும். எமது மறைமாவட்ட திருஅவையையும் அதன் பணிகளையும் மீளாய்வு செய்யவும் புதுப்பிக்கவும் இது சிறப்பான கருவியாக அமைந்துள்ளது. கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் முழுமையாகப் பயன்படுத்தி மறைமாவட்ட திருஅவையின் வளர்ச்சியில் பங்கேற்போம். எமது மேய்ப்புப்பணியின் எதிர்நோக்கிய ஆன்மீகம், கல்வி, சமூகப் பணிகளில் பல வளர்ச்சியை நாம் சந்தித்துள்ளோம். தொடர்ந்து செயல்படவும் முன்னேறவும் அனைத்து குருக்கள், துறவற சகோதர சகோதரிகள் பொது நிலையினரை வேண்டிநிற்கின்றோம். அதேவேளை மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் பெருகவும் எமது மேய்ப்புப்பணி தடையின்றி தொடரவும் செபிக்குப்படி கேட்டுக் கொள்கிறோம்.

இறுதியாக, இறையாசீரும் மரியன்னையின் வழிகாட்டலும் புனித யோசேப்வாஸ் முனிவரின் பரிந்துரையும் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் வழிநடத்த வேண்டி நிற்கின்றோம்.

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

# தீரனியம் (Autism) பிள்ளைநேய பாடசாலை அகவை ஐந்து

"ஓட்டிசம்" என்று அழைக்கப்படுகின்ற மூளைவிருந்தி நிலைக் கோளாறு வாழ்நாள் முழுவதும் நீடிக்கக்கூடிய ஓர் பிரச்சனையாகும். இது தொடர்பாக மருத்துவ துறை சார்ந்தவர்களைத் தவிர ஏனையோருக்கு ஓர் தெளிவின்மை காணப்படுகின்றது. இக்கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை உலகளாவிய ரீதியில் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகாதார, கல்வி, சமூக பராமரிப்பு, வழிகாட்டல்கள் ஆலோசனை கூறல் போன்ற பல சேவைகள் நல்லதரத்தில் உள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இச்சேவைகள் அடிமட்டத்திலே உள்ளன. இலங்கையை பொறுத்தமட்டில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பராமரிப்பு, சிகிச்சை நிலையங்களோ இல்லை. வீடுகளிலேயே முடங்கிக்கிடக்கும் நிலை காணப்படுகின்றது.

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நடத்தை கோலங்களை சுருக்கமாக கூறின் மொழியாற்றல், கண்பார்வை, செவிப்புலன், தானாக இயங்க முடியாத நிலை ஒரு செயலை, சொல்லை மீள மீள வலியுறுத்தல், புறழ்வு நடத்தைகள், சமூக தொடர்புகள், குறிப்பாக சொன்னால் சமூக இசைவாக்கமின்றி தன்னிலை உணர்வற்ற குறைபாடு உள்ளவர்களாகவும், கற்றல் இடர்பாடுகள் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

"ஓட்டிசம்" பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் இதனுடைய இடைத்தாக்கம் பெற்றார். அயல், கல்வி போன்ற சமூகத்தில் ஒவ்வாத அபிப்பிராயங்களாகவும், தாழ்வு மனப்பான்மை வேண்டா வெறுப்போடு தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வர்களாகவும் காணப்படுகின்றனர். இக்கோளாறு ஒரு நோயல்ல மனித மூளை வளர்ச்சிப்படியில் ஏற்படுகின்ற ஓர் தாக்கம் என்பதை சமூகம் விளங்கிக் கொள்வது மிகக் குறைவு. இதனால் தவறான பிள்ளையின் வளர்ச்சிக்கு ஒவ்வாத அணுகு முறைகளை பெற்றார் கையாளுகின்றனர்.

மட்டக்களப்பில் உளநல மருத்துவர்கள் பாடசாலை விசேட கல்வி அலகு மருத்துவம் சமூகம் என பலதரப்பட்டவர்களும் "ஓட்டிசம்" சிறுவர்களை இனங்கண்டுள்ளனர். ஆயினும் அவர்களை நல்நிலைக்கு கொண்டுவர இடர்பாடுகள் உண்டு என்பதையும் உணர்ந்தனர். எனினும் மூளை விருத்தி கோளாறினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உளநல விசேட மருத்துவர் வைத்தியர் யூடி றமேஸ் ஜெயக்குமார் அவர்களிடம் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமானது. இவ்வாறான பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை நிறுவ வேண்டும். அவர்களை சீராக்கம் செய்ய வேண்டும் நன்னிலைக்கு கொண்டுவர வேண்டும். சமூகத்திற்கு "ஓட்டிசம்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். என்ற எண்ணம் மேலோங்கி அதற்கான இட வசதிகள், பயிற்சி வளவாளர்கள், பொறுப் பெடுப்பவர்கள், அனுசரணை வழங்குபவர்கள், நிதிநிலைமை, எவ்வாறான சிகிச்சை வழங்கலாம் போன்ற எண்ணங்கள் நாள்தோறும் அவரது சிந்தனையில் உருவெடுத்துக் கொண்டே இருந்தது. அப்போதுதான் உளநல சேவையில் ஈடுபடுகின்ற அப்போஸ்தலிக்கப் பணியாற்றுகின்ற அன்புப்பணி சகோதரர்கள் (Brothers of Charity) துறவற சபையின் சேவை வெளிச்சத்திற்கு வந்தது.

மட்டக்களப்பு Brothers of Charity சகோதர இல்ல மேலாளர். ஏனைய அருட் சகோதரர்களோடு கலந்துரையாடி எமது சகோதர இல்லத்தின் ஒருபகுதியில் நடத்தக்கூடிய வாய்ப்பு உண்டு என்பதைக் கண்டறிந்தோம். நாமும் எமது இலங்கைக்கான சபை முதல்வர், ஆசிய பிராந்திய சபை முதல்வர் ஊடாக உரோமையில் இருக்கும் எமது சபையின் அதி மேலாளர் Rev. Bro. Rene Stockman அவர்களுக்கு செய்தி அனுப்பி அவரும் அவரது ஆலோசக குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்து பலருடன் கலந்துரையாடி ஆய்வு செய்து சகோதரர் இல்லத்தின் ஒரு பகுதியில் நடாத்தலாம் என்று பேருவகையோடு அனுமதி வழங்கினர். அதிமேலாளர் அருட்கலாநிதி Rev. Bro. Rene Stockma அவர்களும் உளநல துறையில் பாண்டித்தியம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செயற்திட்டங்கள் உடனடியாக தீட்டப்பட்டன. மருத்துவ துறைசார்ந்த விசேட பொது மருத்துவர்கள், மருத்துவபீட விரிவுரையாளர்கள், கல்வித்துறை சார்ந்தோர், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் என்று பலவேறு அமைப்புக்களுடன் கலந்துரையாடப்பட்டு இடவசதிகள் ஆயத்தம் செய்யப்பட்டன. பயிற்சி வளவாளர்களும் தெரிவு செய்து உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

**அருட்சகோதரர் ஸ்ரீபன் மத்தியு Fc**
**சகோதரர் இல்லம், மட்டக்களப்பு.**

தொடரும்...

**இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு இருப்போம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணக்க மாதத்தில் இலங்கையின் பாதுகாவலியை நோக்கி!

"வரிசையில் வாருங்கள்!", "போளினில் போய் நில்லுங்கள்!"
"டோக்கன் படி வாருங்கள்!", "லைன் இருக்கு தெரியலயா?"
இன்றைய இலங்கையின் நிலைமையை
வரிகளிலேயே உரைத்துவிடும் வார்த்தைகள் இவை.
அத்தியாவசியத் தேவைகளுக்கே அரைவயிற்றுக் கஞ்சியோடு
ஆளைக்கொல்லும் வெய்யிலில்
ஆமை வேகத்தில் நகரும் வரிசையில் நின்றே உயிரைவிடும்
அவலம் அரங்கேறும் தேசத்தில்
நாம் இப்போது வணக்க மாதத்தினை நினைவு கூருகின்றோம்.
இடைவிடாமல் ஓதும் செபமாலையில் மன்றாட்டுக்கள்
நம் இலங்கை நாட்டின் பாதுகாவலியாம் மரியன்னையின் பரிந்துரையை
நம் மக்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வேளை பெற்றுத் தரட்டும் என்பதே
எம் மன்றாட்டு கலந்த நம்பிக்கை.

திறனற்ற தலைமைத்துவமே நம் தேசம் திண்டாடக் காரணம் என்று
எல்லோரும் பேசுகின்றனர்.
பதவியில் இருந்தோரின் அவாத்தனமும், அசமந்தப் போக்கும்,
அடுத்தவர் பற்றிய கவலையற்ற தன்மையும், ஊழலுமே
இலங்கையின் இந்நிலைக்கு காரணமென்று
அனைத்து ஊடகங்களிலும் ஒருமித்து ஓதுகின்றனர்.
அதுவும் சரிதான்! என்று நாமும் சொல்லிவிட்டுப் போகமுடியாது!
நம் தேசத்தின் வீழ்ச்சிக்கு ஒவ்வொரு குடிமகனும் காரணம்
என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நல்ல பாடசாலைக்கு சேர்ப்பதிலிருந்து
பல்கலைக்கழகம் போகும் வரை அனைத்து ஊழல்களையும்
நம் பிள்ளைகளுக்காக என்று சுயநலத்தோடு செய்வது யார்?
சமையல் எண்ணெய் முதல் சவர்க்காரக் கட்டி வரை
இருப்பதையெல்லாம் தனக்கு மட்டுமென்று வாங்கிப் பதுக்குவது யார்?
டொலர் பற்றாக்குறை என்கிறார்கள்
இன்னமும் கள்ளமாய் வெளிநாட்டு நாணயங்களைக் கொணர்ந்து
கள்ளச்சந்தையில் மாற்றி இலாபம்
தேடுவது யார்?
ஹர்த்தால் என்றால் வீதியை வெட்டி
டயர்களை எரித்து நாசம் பண்ணுவது.
போராட்டம் என்றால் பொதுச்
சொத்துக்களை சேதம் பண்ணி,
வாகனங்களை எரிப்பது, உடைப்பது,
மறியல் என்றால் வன்மங்களைத்
தீர்க்கும்
சந்தர்ப்பமாய்ப் பயன்படுத்துவது என்று
இவற்றையெல்லாம் செய்வது நாம்
தான்!
இலங்கையின் சாதாரண குடிமக்களாகிய
நாம் தான்!



மாற்றங்கள் தேடி மன்றாடும் போது
தலைவர்களின் மாற்றங்களுக்கு
பதிலாக
இலங்கையின் மக்கள் ஒவ்வொருவருக்குமான
சிந்தனை மாற்றத்திற்காக மன்றாடுவோம்.
இது எங்கள் நாடு, இது எங்கள் தேசம் என்ற
பொறுப்புணர்விற்காக மன்றாடுவோம்.
மதம், அரசியல், இனம், சாதி என்ற
பிரிவினைகளைக் கடந்து பயணிக்க நமக்கு பலம் கேட்டு மன்றாடுவோம்.

இலங்கையின் இராக்கினியாகிய மரியன்னை
இவ்வணக்க மாதத்தில் நம் ஒவ்வொருவரின் மனதிலும்
உயிர்த்த இயேசுவின் புது ஒளி வீசச் செய்வாராக.

தொடர்ந்து சந்திப்போம்
இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆசிரியர்!



# படித்ததில் பிடித்தது

## மிரட்டல் மரியாதை

ஜெர்மனியில் ஹிட்லரின் சர்வதிகார ஆட்சி.
அவன் ஒருநாள் மாறு வேடத்தில் சினிமாவுக்குப் போனான்.
திரையரங்கில் படம் முடிந்து அவனது உருவப்படம் தோன்றியது.
அனைவரும் நடுக்கத்துடன் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர்.
மாறு வேடத்தில் இருந்த ஹிட்லர் மட்டும் அமர்ந்தே இருந்தான். எழுந்து வணக்கம் செய்யவில்லை.
வணக்கம் செய்தபடி அருகில் நின்றவன் அமைதியாய் முணுமுணுத்தான்:
"எனக்கும் அதே கருத்து தான்.
அமர்ந்தபடி ஹிட்லரை அவமரியாதை செய்ய ஆசைதான்.
ஆனால் வெளிப்படையாய் செய்ய முடியாது.
யாரும் பார்த்தால் உயிர்க்கு ஆபத்து..!"
தொடர்ந்து சொன்னான்:
"நீ அமர்ந்து செய்யும் அவமரியாதையை
நான் எழுந்து நின்று செய்கிறேன். அவ்வளவுதான்!



மரியாதை...
அன்பினாலும் வரும்,
அரட்டினாலும் வரும்.

**- அருட்பணி T. கிங்ஸிலி றொபட்**

# மறைக்கல்வி மாணவர்களின் தவக்கால தியானம்



பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில் மறைக்கல்வி மாணவர்களின் தவக்கால சிந்தனையும், சிலுவைப்பாதையும் 10.04.2022 அன்று காலை 7.45 மணி தொடக்கம் 11.00 மணிவரை அருட்பணி றொகான் பேனாட் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.

இச்சிலுவைப்பாதையை முன்பள்ளி தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்கள் சிறப்பித்தனர். இதனை மறையாசிரியர்கள் நெறிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து திருப்பலியுடன் தியானம் இனிதே நிறைவடைந்தது.

**தகவல் - A. சகாய மேரி**

# இதய தீபம் முன்பள்ளியின் பட்டமளிப்பு நிகழ்வு 2021



பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில் இயங்கிவரும் "இதய தீபம் முன்பள்ளியின்" 2021ம் ஆண்டிற்கான பட்டமளிப்பு நிகழ்வானது 02.04.2022 அன்று மாலை 4.30 மணிக்கு அனா மண்டபத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வை சிறப்பிக்க முன்பள்ளியின் நிர்வாகி அருட்பணி றொகான் பேனாட் அவர்களும், புனித லூர்து அன்னை றோ.க.வி அதிபர் அருட்சகோதரி மேரி மெட்டலின் தெரேசா அவர்களும், அருட்சகோதரி ஹர்சா பெனாண்டோ அவர்களும் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் திருமதி சு. நிசாந்தினி, செல்வி அமுதியா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் 32 சிறார்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். சிறார்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேறியது சிறப்பம்சமாகும்.

**தகவல் - முன்பள்ளி ஆசிரியர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல... மற்றவர் மனதில் நீ வாழும் வரை...

# இனிய உளவாக இன்னாத கூறல்...

## இன்னுமா தயக்கம் – 23

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே, இன்றைய காலகட்டத்தில் உண்மை, அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற விழுமியங்கள் மிகவும் எட்டாக்கனிகளாக மாறிக் கொண்டிருக்கிறது. என்பதை கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இவை இப்படி மாறிப்போக என்ன காரணம்? நாம் ஏன் நேர்மறை விழுமியங்களை விட்டுவிட்டு எதிர்மறை செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் தருகின்றோம். நம் சமயம் மற்றும் கலாச்சாரம் போன்றவை நேர்மறை விழுமியங்களை கற்பித்துக் கொண்டிருக்க எப்படி இந்த எதிர்மறை பண்புகளை நாம் கற்றுக் கொண்டோம். இப்படிப் பல கேள்விகள் நம் மனதில் பதில்களற்று அலைந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கேள்விகளுக்கு சில பதில்களை நாம் கூற விழைகின்றோம். இவற்றை நாம் கருத்தில் கொள்ளும் போது, அந்த சிந்தனைகள் நமக்குள் சில எண்ண மாற்றங்களை கொண்டுவரும் என்று நாம் நம்புகின்றோம்.

"இனிய உளவாக இன்னாத கூறல்,
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

என்று வள்ளுவர் கூறுவார். நம்மைச் சுற்றி பல நல்லன இருக்கின்றன. அவற்றை நாம் ஏன் தேர்ந்தெடுப்பதில்லை காரணம், நம் மனதைக் கட்டுப்படுத்தும் நம் நம்பிக்கைகள் இந்த நம்பிக்கைகள் நம் எண்ணங்களைத் தீர்மானிக்கின்றன. நம் எண்ணங்கள் நம் செயல்பாடுகளைத் தீர்மானிக்கின்றன. நம் செயல்பாடுகள் நம் ஆளுமையைத் தீர்மானிக்கின்றன. எனவே நாம் கொண்டுள்ள சில நம்பிக்கைகளை நாம் சீர்தூக்கிப் பார்க்க அழைக்கப்படுகின்றோம்.

இந்த நம்பிக்கைகள் இரண்டு வகைப்படும் ஒன்று ஏட்டு நம்பிக்கை, மற்றொன்று செயல்பாட்டு நம்பிக்கை. ஏட்டு நம்பிக்கையே நமக்கு வெளியில் தெரிகின்றது. செயல்பாட்டு நம்பிக்கையை நாம் பல நேரங்களில் வெளியே காட்டுவதில்லை ஏனென்றால் அந்த நம்பிக்கையை பிறர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணம் மிக ஆழமாக ஒவ்வொருவருக்கும் இருக்கும். இதனை சில உதாரணங்கள் மூலம் பார்க்கலாம்.

உங்களிடம் "விவிலியத்தை நம்புகிறீர்களா?" என்று கேட்டால் உடனடியாக வேறு சிந்தனையே இன்றி பதில் கூறுவோம். "ஆம் நம்புகிறோம்" என்று அதில் இயேசு "கவலைப்படுவதால் யார் தன் உயரத்தில் ஒரு முழம் கூட்ட முடியும் எனவே கவலைப்படாதீர்கள்!" என்று கூறியிருப்பதை நம்புகிறீர்களா என்று கேட்டால் அதற்கும் "ஆம் நம்புகிறோம்!" என்றே பதில் கூறுவோம். அப்படியானால், நீங்கள் அனைவரும் கவலை எதுவும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கின்றிர்களா? என்று கேட்டால் "ஆம்!" என்று எத்தனை பேரால் பதில் சொல்ல முடியும்?

"விவிலியத்தை நம்புகிறேன், அதுவும் முழுமையாக நம்புகிறேன்!" என்று சொல்வது நம் ஏட்டு நம்பிக்கை ஆனால், விவிலியத்தையும் விட நாம் செயல்படுத்தும் சிலவற்றை நம்புகின்றோம். அது செயல்பாட்டு நம்பிக்கை "இறைவன் நம்மைக் காப்பாற்றுவார். எனவே கவலை கொள்ள வேண்டாம்!" என்பது விவிலிய படிப்பினை. அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் நான் கிறிஸ்தவன் என்று மற்றவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே அதை நான் ஏட்டளவில் நம்புகிறேன். ஆனால் அதை செயல்படுத்த முடியாது ஏனென்றால் நாளை என் வாழ்க்கைக்கு தேவையானதை கடவுள் நிச்சயமாக தந்துவிடுவார் என என்னால் நம்பி வாழாதிருக்க முடியாது எனவே நாளைக்கு நான் எப்படி வாழ வேண்டும் என்பதைக் குறித்து நான் திட்டமிட வேண்டும். அப்படித் திட்டமிடும் போது வரும் சில சிக்கல்களை எப்படி நானே தீர்ப்பது என்பதைப் பற்றி கவலை கொள்ள வேண்டும். இது செயல்பாட்டு நம்பிக்கை இந்த நம்பிக்கையை நியாயப்படுத்துவதற்கு நம்மிடம் பல காரணங்கள் அனுபவம் சார்ந்த பல விளக்கங்கள் இருக்கும். எனவே இந்த செயல்பாட்டு நம்பிக்கையை தவறு என்று தெரிந்தாலும் தனிப்பட்ட விதத்தில் நம்மால் நிராகரிக்க முடியாது. எனவே நாம் இரண்டு ஆளுமைகளாக தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருப்போம்.

நமது ஏட்டு நம்பிக்கையும் செயல்பாட்டு நம்பிக்கையும் இப்படி முரண்பட்டதாக இருக்கும் போது நாமும் முரண்பட்ட மனிதர்களாகவே இருக்கின்றோம். நமக்குள்ளே பல சிக்கல்கள், தீர்க்க முடியாத கேள்விகள், சோகங்கள், விடைதெரியாத புதிர்கள் என்று வளர்ந்து கொண்டே இருக்கும். இதுவே நமது முரண்பாடுகள் இன்னும் அதிகமாக காரணமாக அமைகின்றது. மீண்டும் மீண்டும் இது ஒரு சங்கிலித் தொடர் போன்று ஒன்றை ஒன்று வளர்த்துக் கொண்டே இருக்கும்.

நமது ஆன்மீகம் என்பது இந்த ஏட்டு நம்பிக்கையையும் செயல்பாட்டு நம்பிக்கையையும் ஒருங்கிணைக்கும் ஒரு முயற்சியேயாகும். எனவே நாம் ஏட்டளவில் நம்பியிருப்பதை செயுல்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். இந்த ஒருங்கிணைப்பே நமது நிம்மதிக்கான வழியாகும்.

இந்த ஒருங்கிணைப்புக்கு என்ன வழி? நமது ஆன்மீகம் நமக்குக் காட்டும் வழி என்ன? என்று பார்க்கும் போது, நமது தாய்த்திரு அவையானது ஒரு சிறந்த வழியை நமக்குக் காட்டியிருக்கின்றது. அதுவே "ஆன்ம சோதனை!" ஒரு மனிதன் தன்னைத் தானே உணர்ந்து கொள்ள இந்த ஆன்ம சோதனையே அவனுக்கு உதவுகின்றது. ஆன்ம சோதனை என்பது நம்மை நாமே உற்று நோக்குவதைக் குறிக்கின்றது. நாம் பெரிய ஞானிகள், அறிஞர்கள் அல்லது புனிதர்கள் என்று கூறும் பலரும் இந்த ஆன்ம சோதனை மூலமாகவே பல அரிய உண்மைகளைக் கண்டறிந்து அவற்றை தம் வாழ்வில் கடைப்பிடித்து நமக்குப் போதித்திருக்கிறார்கள்.

நம்மை நாமே உற்று நோக்குவது, என்பது நம் எண்ணங்களை எவ்வித பாராபட்சமுமின்றி கவனித்து சீர்தூக்கிப் பார்ப்பதாகும். நம் உண்மையான நிலையை நாம் அறிந்து கொள்வதற்கு இந்த "உற்று நோக்கல்" நமக்கு உதவியாக இருக்கும். இது நமக்கு மிக முக்கியமானதாக இருப்பதற்கு காரணமாக நான் பின்வரும் ஒரு நிகழ்வைக் கூற விழைகின்றேன்.

ஒரு பெண்மணி கண்ணீர்மல்க தொலைக்காட்சியில் வரும் ஒரு காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அந்தக் காட்சியில் ஒரு சிறுமி தனது சித்தியால் கொடுமைக்குள்ளாக்கப் படுகிறாள். எல்லா வேலைகளையும் அந்தச் சிறுமியை செய்யச் சொல்லிவிட்டு சாப்பாடு கூட சரியாக கொடுக்காமல் வஞ்சிக்கின்றாள். அந்தச் சிறுமி தன் தட்டில் போடப்பட்டிருக்கும் பழைய சோற்றை சாப்பிட மனமில்லாமல் தான் தன் தாயுடன் கழித்த நாட்களை நினைவு கூர்கின்றாள். அந்தக் காட்சி திரையில் தோன்றும் போது அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண், "இப்படியும் கொடூர மனம் படைத்த பெண்கள் இருக்கின்றார்களா!" என்று தன் மூக்கை சிந்திக் கொள்கிறாள். அப்போது அவளது வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் வயதான அம்மா அவளுக்கு பால் காய்ச்சி எடுத்து வருகின்றாள். அந்தப் பாலை கையில் வாங்கிப் பார்த்துவிட்டு, "அடியே கிழவி, உனக்கு எத்தனை தடவை சொல்வது, பால் காய்ச்சும் போது புகை படாமல் காய்ச்ச வேண்டும் என்று! இந்த புகை நாற்றம் எடுக்கும் பாலை நாய் தான் குடிக்கும்!" என்று சொல்லி அந்த வயதான பெண்மணியின் முகத்தில் ஊற்றி விடுகின்றாள். இப்போது, திரையில் தோன்றிய அந்த சிறுமியைப் போன்று அந்த மூதாட்டி சமையல் அறையில் சென்று, தான் தன் கணவர் உயிரோடு இருந்த போது மகிழ்ச்சியாக கழித்த நாட்களை எண்ணிப் பார்த்து தனது நிகழ்கால நிலையை எண்ணி அழுகின்றாள்.

நிழலில் தெரியும் காட்சியைப் பார்த்து கண் கலங்கி அந்தப் பெண்மணிக்கு நிஜத்தில் தான் நிகழ்த்தும் கொடுமைகளை அறிந்து கொள்ளும் அளவிற்குக் கூட அறிவில்லை, என்று தான் சொல்ல வேண்டும் அந்தப் பெண்மணிக்கும் ஏட்டுக் கல்வியாக பிறரை காயப்படுத்தக் கூடாது என்று தெரிந்திருக்கின்றது. ஆனால் அது செயல்பாட்டுக் கல்வியாக மாறவில்லை காரணம் அவர் தான் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார். இந்தப் பெண்மணி போல அறியாமையால் பலர் இது போன்ற கொடுமைகளை தொடர்ந்து தங்கள் வாழ்க்கையில் அரங்கேற்றிக் கொண்டே தான் இருக்கின்றார்கள். இந்த அறியாமையே நம் அனைத்து பாவங்களுக்கும் துன்பங்களுக்கும் முரண்பாடான நிலைகளுக்கும் காரணம் என்றால் அது மிகையாகாது.

ஒரு ஆசிரியர், தன் வகுப்புப் பிள்ளையிடம், உண்மை பேசுவது எளிதா, பொய் பேசுவது எளிதா?" என்று கேட்கிறார். அதற்கு ஒரு மாணவர் எழுந்து, "உண்மை பேசுவது தான் எளிது, பொய் பேசுவது கடினம். ஏனென்றால் உண்மை பேச நாம் அதிகம் சிந்திக்கத் தேவையில்லை. உள்ளதை உள்ளவாறு பேசுவதற்கு நாம் அதிகம் கஷ்டப்பட தேவையில்லை, அதுவுமில்லாமல் உண்மை நம்மை அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் எளிதாக விடுவித்துவிடும். ஆனால், பொய் பேசுவதற்கு நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். காரணம் இல்லாத ஒன்றை மிக நேர்த்தியாக உருவாக்க வேண்டும். அந்த உருவாக்கப்பட்ட கதையை அனைவரும் நம்ப வேண்டும், யாரும் அதற்கு முரண்பட்ட கருத்தை அந்த செயல் தொடர்புடைய நபருக்கு தெரிவித்து விடக் கூடாது என்று பலவற்றை கவனிக்க வேண்டும். அப்படி மிகவும் கவனமாக உருவாக்கப்பட்ட கதையும் கூட மிக எளிதாக வெளிவந்து அது பொய் என்பதை மற்றவர் கண்டபிடித்துவிடுவர். அப்படி கண்டுபிடித்து விட்டால், பிந்தைய நிலை முந்தைய நிலையை விட மிக மோசமாக மாறிவிடும். எனவே பொய் பேசுவதை விட உண்மை பேசுவதே எளிது! என்றான் அந்த மாணவன். ஆசிரியர் அந்தக் கருத்து சரியானது தானா என்று மற்ற மாணவர்களிடம் கேட்க, அனைவரும் ஒரே குரலாக, அது தான் சரி என்றும் ஒத்துக் கொள்கிறார்கள்.

இப்போது ஆசிரியர் கேட்கிறார், "இத்தனையும் தெரிந்த உங்களில் எத்தனை பேர் உண்மை மட்டும் பேசியவர்களாக இருக்கிறீர்கள்?" என்று, அதற்கு அவர்கள் மத்தியில் அமைதி மட்டுமே பதிலாக வருகின்றது. காரணம் மேற்சொல்லப்பட்ட அனைத்து கருத்துக்களையும் அனைவரும் அறிந்திருந்தார்கள். ஆனால் அவற்றை அவர்கள் செயல்படுத்த முடியாமல் இருக்கிறார்கள்.

எனவே இப்போது நமக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகின்றோம். மக்கள் இனிய உளவாக இன்னாத செய்து கொண்டிருப்பதற்கு அவர்களது அறியாமையே காரணம். தன்னைத் தானே உணர்ந்து கொள்ளும் அறிவே சிறந்த ஞானமாகும். எனவே நாம் நம்மை அறிந்து கொள்ள வேண்டும். நமது எண்ணங்களையும் தீர்மானங்களையும் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி புரிந்து கொள்வதே நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய ஞானமாகும்.

இறையாசீருடன்

அருட்பணி. அலெக்ஸ் செல்லையா க.ச

**எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டம் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும். கவலையை விடுங்கள் வாழ்க்கையை முதலில் வாழத்தொடங்குங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

## ஏதேன் தோட்ட மனிதர்கள்

# உடல் இறையியலும் திருமண உறவும்

தொடக்க நூலில் வாக்கியங்களை ஆராயும் போது இந்த உண்மைகள் மிகத்தெளிவாக விளங்குகின்றன. முதல் மனிதன் முதல் பெண்ணை கண்டவுடன் அவன் அவள் மீது ஆசைக் கொள்வதையும் அவன் அவளோடு ஒன்றிக்க முயல்வதையும் (Cling) பின்பு அவர்கள் ஒருடலாக (One flesh) மாறுவதையும் பார்க்கின்றோம். இவ்வாறு அவர்கள் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைகின்றனர். ஒருவர் மற்றவரின் “சுயத்தை” ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறே ஒருவர் மற்றவருக்கு தம் சுயத்தை வழங்குகின்றனர். தங்களை முழுமையாக ஒருவர் மற்றவருக்கு வழங்குகின்றனர். இந்த “தன்னைக் கொடுத்தல்”, “ஏற்றுக்கொள்ளல்” என்பன முறிவுபடாத அல்லது பிளவுபடாத ஒரு இணைப்பை கணவன் மனைவியிடையே ஏற்படுத்துகின்றது. ஆகவே திருமண உறவு என்பது முறிவுபடாத உடைக்கமுடியாத, பிரிக்க முடியாத ஓர் இணைப்பாக திகழ்கிறது. உடன்படிக்கைகளில் இறைவன் பங்கேற்றல் மற்றும் இறைவனின் உடனிருப்பே பிரதிநிதித்துவப்படுத்தல் அகியவற்றை விரும்புகின்றார்.

இறைவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கைகளில் மக்கள் பங்கெடுக்க அழைக்கப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டு காலத்தில் மக்கள் பலியிடுவதனூடாகவோ விருத்தசேதனம் செய்வதனூடாகவோ அல்லது ஆணும் பெண்ணும் திருமணம் புரிவத னூடாகவோ பங்கேற்றார். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து தனது சிலுவை மரணத்தி னூடர்கவே பங்கேற்றனர். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து தனது சிலுவை மரணத்தினூ டாக இந்த உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றார். இந்த புதிய உடன்படிக்கையை நாம் திருப்பலியில் கொண்டாடுகின்றோம். அங்கே மக்களின் பங்கேற்பு ஆக்கபூர்வமாகவும் உற்சாகமாகவும் இருக்கின்றது.



இயேசு அவரின் உடலையும் இரத்தத்தையும் அப்ப இரச வடிவில் எமக்கு தருகின்றார். நாம் அதை நற்கருணையாக பெற்றுக்கொள்கின்றோம். அவ்வாறே மக்களும் தங்களுடைய வாழ்க்கையூடாக உடன் படிக்கையில் பங்கேற்கின்றனர். மோசே வழியாக இறைவன் தனது உடன்படிக்கையை வெளிப் படுத்தியபோது மக்கள் அவ்வுடன்படிக்கைக்கு அமைய வாழவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவ்வாறான வாழ்க்கை எம்மை சுதந்திர மனிதர்களாக மாற்றும் என்றும் இஸ்ரயேல் மக்கள் இறைவனின் உடனிருப்பின் சின்னமாக திகழ்வார்கள் என்றும் கூறினார். இவ்வாறு இஸ்ரயேல் மக்களை இறைவன் இறையன்புக்கு சாட்சிகளாக திகழ அழைத்தார். உடன்படிக்கைக்கு அமைவான மக்களின் நல்வாழ்க்கை முறைமைகளே இறைவனின் உடனிருப்பை வெளிப்படுத்தும் அம்சமாக திகழ்கின்றது.

திருமணம் உடன்படிக்கை கருத்துக்களை நிலை நாட்டுகின்றது. திருமணம் திருவருட்சாதனமாக செயல்பட்டு இப்புதிய உடன்படிக்கையின் ஆசீரைப்பெற்றுக் கொடுக்கின்றது. மணத் துணைவர்கள் இறை அன்பை பிரமாணிக்கத்தோடு பகிர்ந்து கொள்ள இறைவனால் அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு பங்கேற்பதனூடாக அவர்களும் இவ்வாறு உடன் படிக்கையில் இணைகின்றனர்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமின் தனிமையை அறிந்த இறைவன் அவனை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தினார். “உறக்கத்திலாழ்த்துதல்” இறைவன் ஓர் உன்னத மறைபொருளான செயலை செய்ய போகின்றார். என்பதை குறித்து காட்டுகிறது. ஆதாம் உறக்கத்திலிருந்த போது அவனது விலா எலும்பிலிருந்து அவனுக்கு ஒத்த ஒரு பெண்ணை உருவாக்கி கூட்டிவந்தார். இறைவனே அச்செயலை முன்வந்து செய்தார். ஆதாம் அச்செயலை பின் தொடர்ந்து இறைசித்தத்திற்கு இணங்குகின்றான். இவ்வாறு இறைவன் திருமணத்தை ஏற்படுத்தி உடன்படிக்கையை நிலைநாட்டுகின்றார். திருமணம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே திருமணத்தை அழிக்க முடியாது. திருமணம் இறைவனின் படைப்பாகும். அது இறைவனின் கொடையாகும். திருமணம் என்பது ஒரு கண்ணாடியைப் போல கணவன் மனைவி உறவை நாம் பார்க்கும் போது அது இறை மனித அன்பை பிரதிபலிக்கின்றது. திருமணம் இறைவனின் நம்பகத்தன்மையும் அவரின் உடனிருப்பையும் எமக்கு குறித்துக்காட்டுகிறது.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இறைவனின் சாயலாக படைக்கப்பட்டுள்ளனர். ஆகவே கடவுளின் வாழ்வில் மனிதன் பங்கு கொள்வதோடு மட்டுமல்லாமல் அக்கடவுளை பூமியில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றான். எவ்வாறாயினும் இறைவன் கணவனும் மனைவியும் ஒன்றித்திருக்கவும் அந்த ஒன்றிப்பு பரிசுத்த திரித்துவத்தைப் போல மிக உறுதியாகவும், தூய்மையானதாகவும், உண்மையானதாகவும், நெருக்கமானதாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல என்று இறைவன் கண்டார். ஆகவே மனிதன் ஒரு குழுவாக ஒன்றித்து வாழ வேண்டும் என்று விரும்பினார். மனிதன் தனித்தீவாக வாழ முடியாது. அவன் ஒற்றுமையோடு மற்றவரோடு ஒன்றித்து வாழ வேண்டும். தந்தை மகன் தூய ஆவி என்னும் மூவொரு இறைவனின் சாயலைக்கொண்ட உறைவைப்போல மனித நட்புறவும் விளங்க வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார். அவ்வாறே ஆணும் பெண்ணும் திருமண உறவில் இணையும் போது இம் மூவொரு இறைவனின் சாயலை பிரதிபலிக்கின்றனர். மனிதன் இறைவனின் சாயலாக பிரதிபலிப்பது மனிதனின் தனிமையை விட ஒன்றிப்பிலேயே என்று திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

நாம் இறைவனை இயற்கையில் காணமுடியும். இறைவன் அவரின் பிரசன்னத்தை பல விதங்களில் எமக்கு உணர வைக்கின்றார். இயற்கை அழகு, தனிமனித அனுபவம் ஆகியன தனித்துவமான முறையில் இறைபிரசன் னத்தை உணர்த்துகின்றன. மிகச்சிறப்பாக ஆண், பெண் உறவி லேயே இறைவனின் அன்பு மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. நாம் இதை அனுபவித்து இருக்கின் றோம். ஆண், பெண் அன்புறவு என்பது இறைவனின் அன்பிற்கு சாட்சியாக திகழ்கின்றது. ஆகவே திருமணம் என்பது இறையன்பின் சாயலாக இருக்கின்றது. இதையே தான் திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் மனிதன் தனிமையில் அல்ல மாறாக ஒன்றிப்பிலே இறைவனது முழுச்சாயலாக இருக்கின்றான் என்கிறார். ஏதேன் தோட்டத்தில் மனிதன் தனியாக இருந்தான். இருப்பினும் இறைவனின் சாயலிலும் உருவிலும் இருந்தான். இறைவனை பிரதிபலித்தான். ஆனால் இறைவனைப் போல் நடந்தான். இறைவாழ்வில் பங்கேற்றான் ஆயினும் ஏதோ ஒரு குறையை உணர்ந்தான். ஏவாள் அவள் வாழ்வில் இணைந்த பின் அவளோடு ஒருடலாக மாறினான் அப்போது அவளோடு இணைந்து இறைபிரசன்னத்தின் முழுமையை பிரதிபலித்தான். தனிமையை விட ஒன்றிப்பிலேயே இறைவனின் உடனிருப்பு உணரப்படுகின்றது. நாம் இறைவனின் சாயலாக மாறுவது தனிமையிலே என் பதைவிட இறைவனின் ஒன்றிப்பிலே என்பது நிதர்சனமான உண்மையாகும். ஆகவே திருமணம் என்பது ஓர் உடன்படிக்கை என்கின்ற வகையில் நாம் இறைவனின் வாழ்வில் பங்கேற்பதையும் இறைவனை இவ்வுலகில் பிரதிநிதித்துவப் படுத்துவதையும் குறித்துக்காட்டுகின்றது. தொடக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே திருமணம் இறைவனால் நிறுவப்பட்டது. முதலாவதாக கணவனும் மனைவியும் வாழ்நாள் முழுவதும் ஒருவரையொருவர் அன்பு செய்து இணைந்து வாழ தங்களை அர்ப்பணிக்கின்றனர். இரண்டாவதாக தங்களின் தாம்பத்திய உறவின் வழியாக திருமணத்தை முழுமைப்படுத்தி நிலையான, முழுமையான, உயர்ந்த, உன்னத நிலைக்கு கொண்டு செல்கின்றனர். ஒரு திருமணத்தின் முறிவுபடாதநிலைக்கு நிலையான அர்ப்பணமும், தாம்பத்திய உறவும் அவசியமானதாக இருக்கின்றன. இவ் அம்சங்கள் கணவனையும் மனைவியையும் ஒருடலாக மாற்றகின்றன. இவ்வாறு திருமணம் ஓர் உடன்படிக்கையாக நிலைநிறுத்தப்படுகின்றது.

ஜெ. கிறிஸ்டிப்போல்
இயக்குனர்
குடும்ப அப்போஸ்தலிக்க பணியகம் - கண்டி

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| கலர் | 1/4 பக்கம் | 3750.00 |
| | 1/2 பக்கம் | 7500.00 |
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | 2500.00 |
| | 1/2 பக்கம் | 5000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிற்குத் தடை என்றால் அந்த வேலிகளை தாண்டவே விரும்புவேன்

# திருப்பலி நிறைவேற்றும் அருள்பணியாளருக்கான இருக்கை

**வாழ்வு சார்ந்த வழிபாடு – 13**

திருவழிபாட்டில் நான்கு விதமாக கிறிஸ்து உடனிருக்கிறார். திருப்பலியில் திருப்பணியாளரிடத்திலும், இறைவார்த்தையிலும், பீடத்தில் சிறப்பாக நற்கருணையில் அப்ப இரச வடிவங்களிலும், சமூகமாக கூடியிருக்கும் நம்பிக்கையாளர் குழுமத்திலும் கிறிஸ்து உடனிருக்கிறார். கோவிலில் நான்கு இடங்கள் மிக முக்கியமானவை திருப்பலி நிறைவேற்றும் அருட்பணியாளருக்கான இருக்கை, வாசக மேடை, பீடம், நம்பிக்கையாளர்களின் இடம் ஆகிய இந்த நான்கு இடங்கள் கிறிஸ்துவின் நான்கு வகை உடனிருப்பை அடையாளப்படுத்துகின்றன. இவற்றில் முதல் மூன்றும் திருப்பீடமுற்றத்தில் **(Sanctuary)** அமைந்துள்ளன.

திருப்பலி நிறைவேற்றும் அருள்பணியாளருக்கான இருக்கை "திருக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கி மன்றாட்டை வழிநடத்தும் பணியை" **(GIRM 310)** உணர்த்துகிறது. இங்கிருந்து தான் திருப்பலியின் தொடக்கச் சடங்குககளும, நிறைவுச் சடங்ககளும் நிகழ்கின்றன. அருள்பணியாளர் வார்த்தை வழிபாடு நடக்கும் போது இந்த இருக்கையில் அமர்ந்து வார்த்தை வழிபாட்டிற்குத் தலைமையேற்கிறார். தேவைக்கு ஏற்ப இருக்கை இருக்கும் இடத்திலிருந்தோ அல்லது வாசக மேடையிலிருந்தோ மறையுரை ஆற்றலாம் **(GIRM 136)** இப்படியாக, திருவழிபாட்டில் முக்கியமானதாக இருக்கிற தலைதாங்கும் அருள்பணியாளருக்கான இருக்கை குறித்த வரலாற்று, இறையியல், வாழ்வியல் விளக்கங்களை காண்போம்.


அடிப்படையில் இருக்கை என்பது தலைமையேற்கும் அதிகாரத்தைச் சுட்டி நிற்கிறது. பெரிய நிறுவனத்தின் தலைவரை ஆங்கிலத்தில் **"Chair man"** என்றே குறிப்பிடுகின்றனர். மாபெரும் விழாக்களில், சிறப்பு விருந்தினர்களுக்கு 'சிறப்பு இருக்கைகள்' ஏற்பாடு செய்து வைப்பது நாம் அறிந்ததே. இருக்கை அந்த நபரின் முக்கியத்தவத்தை காட்டுகிறது. அவரது பணியை எடுத்தியப்புகிறது. திருவழிபாட்டில் தலைமையேற்கும் அருள்பணியாளர் 'கிறிஸ்துவின் பதிலாளாக' இருக்கிறார். கிறிஸ்துவின் உடலாகக் கூடி வந்திருக்கும் நம்பிக்கையாளர் சமூகத்திற்கு கிறிஸ்துவின் தலையாக அருள்பணியாளர் செயல்படுவதைக் குறித்துக் காட்டுவதே 'தலையேற்கும் அருள்பணியாளரின் இருக்கை' அதனால் தான் பீடத்தில், வாசகமேடையில், இருக்கையில் கூடியிருக்கும் மக்கள் சமூகத்தில் என நான்கு வகைகளில் உடனிருக்கும் கிறிஸ்துவுக்கு தூபம் காட்டப்படுகிறது.

தொடக்க காலத்திலிருந்தே திருவழிபாட்டில் தலையேற்பவர்கான இருக்கை பயன்பாட்டில் இருந்திருக்கிறது. ஆயர்கள் மட்டும் இருந்த அந்நாள்களில் இருக்கை ஆயரின் அதிகாரத்தையும், தலைவராக இருந்து வழிநடத்தும் பணியையும், ஆசிரியராக, நீதிபதியாக என அவர் செய்யும் செயல்களையும் குறித்துக்காட்டியது. பின்னர் ஒரே ஆயரால் மறைமாவட்டத்தின் அனைத்து பத்திகளுக்கும் செல்ல முடியாததைக் கருத்தில் கொண்டு ஆயருக்கு உதவியாளர்களாக அருள்பணிநிலை (குருத்துவம்) தோன்றியது. இந்த அருள்பணியாளர்கள் அயரின் பெயரால் மறைமாவட்டத்தின் பல பகுதிகளில் திருவழிபாட்டிற்கு தலைமை தாங்குகின்றனர். அப்படி தலைதாங்கி வழிநடத்தும் திருவழிபாட்டு நிகழ்வுகளில் தலைமையேற்பவரின் இருக்கையில் அமர்கின்றனர். இது ஆயரது தலைமைத்துவத்தின் நீட்சியாக பங்குகளில் இருக்கிறது.

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் தலைமைக் கோவிலில் **(Cathedral)** ஆயரின் இருக்கை **(Cathedra)** அமைக்கப்பட்டிருக்கம். உண்மையில், அங்கு ஆயரின் தலைமை இருக்கை இருப்பதாலேயே அந்தக் கோவில் மறைமாவட்டத் தலைமைக் கோவிலாக இருக்கிறது. இது பிற இருக்கைகளைப் போலில்லாமல் அரியணை போல அமைந்திருக்கும். ஆயர் மட்டும் பயன்படுத்தும் இந்த இருக்கை அவரது தலைமையையும், நம்பிக்கைப் போதனைகள், திரு அவையின் படிப்பினைகளையும் அவரது உறுதிப்பாட்டையும், நிலைத்தன்மையும் குறித்துக்காட்டும் விதத்தில் அசைக்கமுடியாத நிலையான இருக்கையாய் அமைந்திருக்கிறது.

கிறிஸ்து பேதுருவை திரு அவையின் தலைவராக ஏற்படுத்தினார். பிற திருத்தூதர்கள் பேதுருவின் தலைமையில் ஆயர்களாக செயலாற்றினர். அதேபோலத் தான் பேதுருவின் வழிவருபவரான உரோமை ஆயரைத் தலைவராகக் கொண்டு அனைத்து ஆயர்களும் உலகின் பல பகுதிகளில் பணியாற்றுகின்றனர். (திரு அவையில் ஆயர்களின் அருள்பணி . எண் 2 4) ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரின் தலைமையில் அங்கிருக்கும் அருள்பணியாளர்கள் மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றுகின்றனர். இதன் தொடர்ச்சியாக நம்பிக்கையாளர்கள் தங்கள் இடங்களில், குடும்பங்களில், பணித்தளங்களில் கிறிஸ்துவுக்கு சான்று பகர்கின்றனர். இந்தத் திருஆட்சிப் படிநிலையை **(Hierarchy)** சுட்டிக் காட்டுவதே தலைமையேற்பவரின் இருக்கை.

புனித பேதுருவின் தலைமையைச் சுட்டிக்காட்டும் பேதுருவின் இருக்கை உரோமை ஆயரான திருத்தந்தையின் தலைமையை குறித்து நிற்கிறது. திருத்தந்தையின் இருக்கை ஆயர்களின் இருக்கைகளுக்கத் தலைமையேற்கிறது. ஆயர்களின் இருக்கைகள் பங்குகளில் உள்ள அருள்பணியாளர்களின் இருக்கைகளுக்குத் தலைமையேற்கின்றன. அருள்பணியாளர்களின் இருக்கைகள் நம்பிக்கையாளர்களின் இருக்கைகளுக்குத் தலைமையேற்கின்றன. அனைத்து இருக்கைகளுக்கும் கிறிஸ்துவின் அரியணையே தலைமையேற்கிறது. இந்தத் திரு ஆட்சி அமைப்பு முறையை புலப்படும் அடையாளமாகக் காட்டுபவையே தலைமையேற்பவரின் இருக்கைகள். அதனால் தான் தலைமைக் கோவிலில் (cathedral) மறைமாவட்ட ஆயர் மட்டுமே அவருக்கான தலைமை இருக்கையைப் பயன்படுத்துகிறார். அங்கு ஆயர் திருப்பலி நிறைவேற்றாமல் வேறு அருள்பணியாளர் திருப்பலி நிறைவேற்றினால் அவருக்கு வேறொரு தலைமையேற்கும் இருக்கை பயன்படுத்தப்படும். ஏனெனில், ஆயரின் தலைமை இருக்கையே மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலும் இருக்கிற தலைமையேற்பவரின் இருக்கைகளுக்கு தலைமைதாங்குகிறது. அதோடு அருள்பணியாளர்களும் மறைமாவட்ட ஆயரின் பதிலாளர்களாகவே மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பணிபுரிகின்றனர். அதனால் தான் தலைமைக் கோவிலில் உள்ள ஆயரின் தலைமை இருக்கை படிகளுடன் கூடிய அரியணைபோல அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மறைமாவட்ட ஆயரைப் பணியமர்த்துவதன் அடையாளமாக, ஆயர் திருநிலைப்பாட்டுக்குப்பின் அங்குள்ள பிற ஆயர்கள் அவரைத் தலைமை இருக்கையில் அமர்த்தும் நிகழ்வு நடக்கிறது.



ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 22ம் திகதி "திருத்தூதர் பேதுருவின் தலைமை இருக்கை" என்னும் விழா திரு அவையில் கொண்டாடப்படுவது மேற்குறிப்பிட்ட திரு ஆட்சி அமைப்பு முறையின் படிநிலையைச் சுட்டிக்காட்டவே. திருத்தந்தையின் தலைமை இருக்கை உரோமையில் உள்ள இலாத்தரன் பெருங்கோவிலில் உள்ளது. அதனாலேயே உலகின் அனைத்துக் கத்தோலிக்கக் கோவில்களுக்கும் தலைமைக் கோவிலாக இது இருக்கிறது. திருத்தந்தையின் இந்தத் தலைமை இருக்கை பளிங்குக் கற்களால் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. அதன் கால்மாட்டில் உள்ள படியில் பொறிக்கப்பட்டுள்ள விலங்குகள் திருப்பாடல் 91:13ல் குறிப்பிட்டவை போல இருக்கின்றன. அவற்றைக் காலால் மிதிக்கும் படியாக அரியணை அமைக்கப்பட்டுள்ளதால் திருத்தந்தை கிறிஸ்துவின் பதிலாளாக இருந்து தீமையை ஒழித்துவிடுவார் (உரோ 16:20) என்று சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.

கிறிஸ்துவின் தலைமைத்துவம் பணியாற்றும் நிலைக்கான அடையாளம். அவரே கூறுவது போல, "உங்களுள்...ஆட்சிபுரிபவர் தொண்டு புரிபவராக மாற வேண்டும்... நான் உங்கள் நடுவே பணிவிடை புரிபவனாக இருக்கிறேன்" (லூக்கா 22:23-27) "மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மத் 20:28) என்று தலைமைப் பொறுப்பு என்பது பணியாளராக வாழ கொடுக்கப்பட்டுள்ள அழைப்பே என வலியுறுத்துகிறார். அதனை உணர்த்தவே திருத்தந்தை தன்னை 'பணியாளர்களுக்கெல்லாம் பணியாளன்' என்று அழைத்துக் கொள்கிறார்.

திருத்தந்தைக்கும், ஆயர்களுக்கும், அருள்பணியாளர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள 'தலைமையேற்கும் பொறுப்பு' திரு அவையான நம்பிக்கையாளர் சமூகத்திற்கு பணியாற்ற கொடுக்கப்படும் வாய்ப்பே அன்றி அவர்களை அடக்கியாளும் அதிகாரம் அல்ல. இதுவரை குறிப்பிட்ட 'தலைமை ஏற்றல்' பணிவின், அன்பின் அடையாளமாய் அமைய வேண்டுமென்பதே திரு அவையின் விருப்பம், கூடிவந்திருக்கும் கிறிஸ்துவின் உடலாகிய நம்பிக்கையாளர்களை வழிநடத்த கிறிஸ்துவின் தலையாகச் செயல்பட அழைக்கப்பட்டவரே தலைமையேற்கும் அருள்பணியாளர். இந்தப் பணியைச் செய்ய கிறிஸ்துவின் தாழ்ச்சியும், அன்பும், பணிவும், சேவை மனப்பான்மையும் மிக மிக அவசியமாகிறது. 'கிறிஸ்து அரசர்' பெருவிழாவில் கிறிஸ்துவை பணிபரியும் வேலைக்காரத் தலைவராகக் கொண்டாடுகிறபோது அவர் பெயரால் தலைமைப் பொறுப்புகளில் இருப்போரும் 'வேலைக்காரத் தலைவர்களாக' **(Servant Leaders)** வாழவேண்டிய அவசியம் உணர்த்தப்படுகிறது.

தலைமையேற்பவரின் இருக்கை, "எவ்வாறாயினும் பகட்டான அரியணைக்கு உரிய எந்தத் தோற்றமும் இருக்கக் கூடாது" ஏனெனில் தலைமையேற்பவர் நம்பிக்கையாளர் குழுமத்தை வழிநடத்தும் பணியைச் செய்கிறாரே ஒழிய, அவர்களை அடக்கி ஆளும் அதிகாரம் கொண்டிருக்கவில்லை ஆகவே இந்த இருக்கை ஆடம்பரமாகவோ, பகட்டாகவோ, இறைமக்களிடமிருந்து தொலைவுபடுத்தி பிரித்துக் காட்டும் இடமாகவோ, கம்பீரத்திற்காகவோ அமைக்கப்பட்டதல்ல **(Built of Living Stones 63, 64)** ஒரு குடும்பத்தில், தந்தை தலைமை இருக்கையில் அமர்வது போல இது அன்பின் அடையாளமாக, நம்பிக்கையாளர்களின் வளர்ச்சியின் மீது கொண்ட அக்கறையின் வெளிப்பாடாக இருக்கிறது. நம்பிக்கையாளர்கள் எளிதில் காணும்படி இந்த இருக்கை அமையவேண்டும். "அருள்பணியாளருக்கும் திருக்கூட்டத்துக்கும் இடையே உள்ள தொடர்புக்கு இடையூறாக உள்ள அதிக தூரம், பீடத்துக்குப் பின்னால் நற்கருணைப் பேழை நடுவில் இடம் பெறுதல் போன்ற அக்கட்டத்தின் உருவ அமைப்போ மற்ற வடிவங்களோ இடையூறாக இல்லாதிருத்தல், மக்களைப் பார்த்த வண்ணம் திருப்பீடமுற்றத்தின் மேல் பகுதியே அத்தகைய இருக்கைக்கு உரிய பொருத்தமான இடம் ஆகும். அதன்படி, தலைமையேற்பவரின் இருக்கை மக்கள் எளிதில் காணும்படி

**சில மனிதர்கள் வரமாக நம் வாழ்க்கையில் வருவார்கள். சில மனிதர்கள் பாடமாக நம் வாழ்க்கையில் வருவார்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் பக்கத் தொடர்ச்சி.... (வாழ்வு சார்ந்த வழிபாடு)

இருக்க திருப்பீட முற்றத்தில் பீடத்திற்கு வலது முன் புறத்தில் வாசக மேடையும், இடது பின்புறத்தில் தலைமையேற்பவரின் இருக்கையும் அமைத்தல் நலம் (Built of Living Stones 63, 64) அருள்பணியாளர் திருநிலைப்பாடு போன்ற தனிப்பட்ட சூழல்களைத் தவிர மற்ற நேரங்களில் தலைமையேற்பவரின் இருக்கை பீடத்திற்கு முன் இருக்கக் கூடாது. பீடத்தின் மேன்மையையும், தனிச்சிறப்பையும் திசை திருப்புவதாக அமையக்கூடாது. அதே வேளையில் பீடம், வாசகமேடை, தலைமையேற்பவரின் இருக்கை, திருமுழுக்குத் தொட்டி ஆகிய நான்கும் ஒன்றோடென்று கொண்டுள்ள தொடர்பைக் குறித்துக் காட்டும் வண்ணம் ஒரே வகையான பொருளால் செய்யப்படுவதும், ஒரே வகை வடிவமைப்பைக் கொண்டிருப்பதும் பரிந்துரைக்கப்படுகிறது.

மறைமாவட்டத்திற்கு ஒரே தலைமை இருக்கை இருப்பது போல, பங்குகளின் திருவழிபாட்டு நிகழ்வுகளில் ஒரே தலைமையேற்பவரின் இருக்கை இருக்கிறது. அது கூட்டுத் திருப்பலியாக இருந்தாலும், தலைமையேற்பவர் ஒருவரே. அவர் கிறிஸ்துவின் தலையாகவும், திரு ஆட்சி அமைப்பு முறையின் அடையாளமாகவும் திருவழிபாட்டில் செயல்படுவதால் தலைமையேற்பவர்க்குரிய பகுதிகளை (செயல்கள், மன்றாட்டுகள்) அவரே செய்ய வேண்டும். அவற்றை உடன் திருப்பலி நிறைவேற்றும் அருள்பணியாளர்களுக்கு பிரித்துக் கொடுக்கக்கூடாது & முடியாது. ஏனெனில் தலைமை தாங்கும் அருள்பணியாளர் கிறிஸ்தவின் பதிலாளாக, ஆயரின் பிரதிநிதியாக அங்கு செயல்படுகிறார். எனவே "அருள்பணியாளர் திருவழிபாட்டின் ஊழியர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் திருப்பலி நிறைவேற்றும் போது தன்னிச்சையாக எதையும் சேர்க்கவோ நீக்கவோ மாற்றவோ அனுமதி இல்லை" இதனை மனதில் வைத்து தலைமை தாங்குகிற அருள்பணியாளர் செயல்பட வேண்டும்.

திருவழிபாடு மற்றும் அருளடையாளங்களின் ஒழுங்குமுறைக்கான உரோமைத் திருப்பேராயத்தின் அறிவுரையான 'மீட்பின் அருளடையாளம்' பின்வருமாறு கூறுகிறது. "குருத்துவத் திருநிலைப்பாட்டுத் திருச்சடங்கில் அளிக்கப்பட்ட மற்றும் ஒவ்வொரு ஆண்டும் திருஎண்ணெய்த் திருப்பலியில் புதுப்பிக்கப்படுகின்ற வாக்குறுதிகளுக்கேற்ப, அருள்பணியாளர்கள் 'இறைவனின் மாட்சிக்காகவும் கிறிஸ்தவ மக்களின் அர்ச்சிப்புக்காகவும் கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சிகளை, சிறப்பாக நற்கருணை பலியையும் ஒப்புரவு அருளடையாளத்தையும், திரு அவையின் மரபுக்கேற்ப பக்தியுடனும் பிரமாணிக்கத்துடனும்' கொண்டாடுவர்களாக மாற்றங்கள், நீக்குதல்கள் அல்லது தன்னிச்சையாகச் சிலவற்றை சேர்ப்பதன் வழியாகத் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தைக் கறைபடுத்தி, தம் பணியின் உள்ளார்ந்த பொருளிலிருந்து அவர்கள் விலகிச் செல்லக் கூடாது. ஏனெனில் புனித அம்புரோஸ் கூறுவது போல், 'திரு அவை தன்னில் அல்ல - மாறாக நம்மில் தான் காயப்படுத்தப்படுகிறது. எனவே நம் தவறு திரு அவையைக் காயப்படுத்தாமல் இருப்பதில் நாம் கவனமாய் இருப்போமாக' எனவே பணிக்காக சிறப்பான முறையில் தம்மையே கையளித்துள்ள அருள்பணியாளர்களால் இறைவனின் திரு அவை காயப்படுத்தப்படாமல் இருக்கட்டும். உண்மையில் ஆயருடைய அதிகாரத்தின் கீழ் அவர்கள் இத்தகைய முறைகேடுகளைச் செய்வதிலிருந்து மற்றவர்களையும் தடுக்கப் பிரமாணிக்கத்துடன் முயல்வார்களாக.

திருவழிபாட்டுக் குழுமத்தில் கிறிஸ்துவின் மறையுடலாகிய திரு அவையின் தலையாக இருந்து செயல்படும் தலைமையேற்கும் அருள்பணியாளர் கிறிஸ்துவின் உடனிருப்பை அடையாளப் படுத்துகிறார். அவரது இருக்கை புனித பேதுருவின் வழிவரும் மறைமாவட்ட ஆயருடைய தலைமைத்துவத்தின் நீட்சியாக பங்குத்தளங்களில் அமைந்துள்ளது. தலைமையேற்பவரின் இருக்கை அவர் பீடத்திலோ, வாசகமேடையிலோ பணியாற்றாமல் இருக்கும் போது ஏதோ 'ஓய்வெடுக்க அமைக்கப்பட்டதன்று, மாறாக கிறிஸ்துவின் உடனிருப்பாக அவரது பதிலாளாக, திரு அவையின் தலையாக இருந்து வழிநடத்தும் பணியின் அடையாளம் என்ற அதன் மேன்மையை உணர்வோம். கிறிஸ்துவின் தலைமையில் இறையாட்சி படைப்போம். வழிபாடு வாழ்வாகட்டும்.

இறையாசீருடன்

அருட்பணி. அலெக்ஸ்சாண்டர்

தொடரும்...

## திருப்பாலத்துவ சபை - பங்கு ரீதியான பங்களிப்பு ஜனவரி - 2022

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 01 | இறை இரக்கத்திருத்தலம் - அலஸ்தோட்டம் | 30,805.00 |
| 02 | புனித சதாசகாய மாதா ஆலயம் - அன்புவழிபுரம் | 23,500.00 |
| 03 | புனித வேளாங்கன்னி ஆலயம் - ஆண்டான்குளம் | 6,050.00 |
| 04 | புனித அந்தோனியார் ஆலயம் - சீனக்குடா | 3,000.00 |
| 05 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம் | 19,000.00 |
| 06 | கிறிஸ்து அரசர் ஆலயம் - கன்னியா | 5,200.00 |
| 07 | புனித சதாசகாய மாதா ஆலயம் - கந்தளாய் | 5,200.00 |
| 08 | புனித செபமாலை மாதா ஆலயம் - குச்சவெளி | 2,700.00 |
| 09 | புனித யூதாததேயு ஆலயம் - இலிங்கநகர் | 6,630.00 |
| 10 | புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர் | 15,175.00 |
| 11 | புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி | 13,300.00 |
| 12 | குழந்தை இயேசு ஆலயம் - உவர்மலை | 15,070.00 |
| 13 | புனித லூர்து அன்னை திருத்தலம் - பாலையூற்று | 14,875.00 |
| 14 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு | 23,340.00 |
| 15 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் - செல்வநாயகபுரம் | 14,720.00 |
| 16 | புனித பாத்திமா அன்னை ஆலயம் - தம்பலகமம் | 2,660.00 |
| 17 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் - திருகோணமலை | 25,000.00 |
| 18 | புனித மரியாள் பேராலயம் - திருகோணமலை | 43,301.00 |
| | மொத்தம் | **269,526.00** |

## எகெட் கரித்தாஸ் - தவக்கால கல்வித் திட்டம் - 2022 பங்கு ரீதியான பங்களிப்பு விபரம்

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 01 | புனித சதாசகாய மாதா ஆலயம் - கந்தளாய் | 11,610.00 |
| 02 | புனித மரியாள் பேராலயம் - திருகோணமலை | 40,187.00 |
| 03 | புனித சதாசகாய மாதா ஆலயம் - அன்புவழிபுரம் | 21,270.00 |
| 04 | இறை இரக்கத்திருத்தலம் - அலஸ்தோட்டம் | 28,045.00 |
| 05 | புனித லூர்து அன்னை திருத்தலம் - பாலையூற்று | 21,650.00 |
| 06 | புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பல்தீவு | 8,340.00 |
| 07 | புனித வேளாங்கன்னி ஆலயம் - ஆண்டான்குளம் | 6,050.00 |
| 08 | திரு இருதய ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம் | 16,040.00 |
| 09 | புனித வனத்து அந்தோனியார் ஆலயம் - செல்வநாயகபுரம் | 6,110.00 |
| 10 | குழந்தை இயேசு ஆலயம் - உவர்மலை | 29,370.00 |
| 11 | புனித குவாடலூப்பே அன்னை ஆலயம் - திருகோணமலை | 15,070.00 |
| 12 | புனித சூசையப்பர் ஆலயம் - நிலாவெளி | 7,097.00 |
| 13 | கிறிஸ்து அரசர் ஆலயம் - கன்னியா | 4,321.00 |
| 14 | புனித பாத்திமா அன்னை ஆலயம் - தம்பலகமம் | 3,150.00 |
| 15 | புனித அந்தோனியார் ஆலயம் - சீனக்குடா | 5,000.00 |
| 16 | புனித அந்தோனியார் ஆலயம் - மூதூர் | - |
| 17 | புனித யூதாததேயு ஆலயம் - இலிங்கநகர் | - |
| 18 | புனித செபமாலை மாதா ஆலயம் - குச்சவெளி | - |
| | மொத்தம் | **223,310.00** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கத் திரு அவையின் தாயாம் அன்னை மரியாளுக்கு வருடந்தோறும் மே மாதத்தை அர்ப்பணித்து அதனை மாதாவின் வணக்க மாதமாகக் கொண்டாடி வருகிறது. இம் மாதத்தில் ஆலயங்களில் விசேட வழிபாடுகள், திருப்பலிகள் இடம்பெறுவதுடன் மாதாவின் திருச்சொரூபம் வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு செபமாலை மற்றும் தியானங்களுடன் விசேட வழிபாடுகள் நடாத்தப்படும்.



அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவின் தாயாக மட்டுமின்றி திரு அவை இராக்கினியாகவும் அனைவரதும் தாயாகவும் போற்றப்பட்டுவருபவர். தம்மை இறை சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ்ந்தவர். அன்னையின் அடைக்கலத்தை தேடுவோருக்கு அருள் பொழிபவர். அதனால் தான் உலகெங்கிலும் பல்வேறு பெயர்களில் அவரது ஆலயங்கள் உருவாக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

மரியாவுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? அது சிலை வழிபாடு என்றெல்லாம் பேசுகிறார்கள். சமுதாயத்திலே ஆண்டுதோறும் அன்னையர் தினம், மகளிர் தினம், குழந்தைகள் தினம், முதியவர் தினம் என்றெல்லாம் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொன்றிலும் அந்தந்த நபர்களின் குணங்கள் வெளிப்படுத்தி அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்து அவர்களை வாழ்த்துகிறார்கள். இந்த விழாக்களை மக்கள் சரியெனவும் நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். மரியாவின் தினம் அல்லது மரியாவின் மாதம் என்று கொண்டாடும்போது நாம் மரியாவின் குணங்களையும், பணிகளையும், வாழ்வையும் முன்வைத்து சிறப்பித்து அதே போல் வாழ நம்மையே முயற்சிக்கின்றோம். இயேசுவும் சிலுவையில் தொங்கும்போது யோவானிடம் இதோ உன் தாய் என்று மரியாவை சமுதாயத்திற்கு கொடுக்கும்போது தாய்க்குரிய மரியாதையும் வணக்கத்தையும் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார். இல்லையென்றால் மரியாவை பற்றி அந்த நேரத்தில் இயேசு பேசியிருக்கத் தேவையில்லையே. விவிலிய கண்ணோட்டத்தில் பார்க்கும் போதுகூட மரியாவுக்கு நாம் செலுத்துகின்ற வணக்கம், பாராட்டு, வாழ்த்துக்களெல்லாம் இயேசுவின் பணித்தலில் இருந்து வருகிறது.

ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு என்னும் திருத்தந்தையின் ஏட்டில் மரியாவைப் பற்றிய கருத்துகள் அழகுபடச் சொல்லப்பட்டுள்ளன. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று இறைத் திருவுளத்திற்குப் பணிந்தவர் மரியா. வார்த்தையின் படி நடந்ததால் ஆண்டவர் இயேசுவுக்கு சீடராக உயர்ந்தவரும் மரியா. ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று நம்பியவர் மரியா. சிலுவையின் அடியில் வந்து சீடராய்ச் சான்று பகர்ந்தவர் மரியா... இப்படியாக திருவிவிலியத்திலிருந்து மரியாவை நம் கிறிஸ்தவ வாழ்விற்குச் சான்றுபகரும் சிறந்த எடுத்துக்காட்டாக பார்க்க முடியும்.

## தேவதாயின் மாதம் இதுவல்லவோ! அதை சிறப்பாய் கொண்டாடி பலன் பெற

எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுபெற்றவர் எனப்போற்றும் என்று முன்னுரைத்தவர் மரியா. அடிமையாய் தாழ்ந்து நின்றவரை ஆண்டவர் உயர்த்தியதால் நன்றி உரைத்தவர் அன்னை மரியா. சிறப்பாக நம் அன்னையை புகழவும் வாழ்த்தவும் இந்த மே மாதம் நமக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இந்நாட்களில் ஆலயங்களில் அல்லது நம் வீடுகளில் ஒன்று கூடி செபமாலை மன்றாட்டுக்களை அர்ச்சனைப் பூக்களாக்கி குடும்பங்களாக குழுக்களாக கூடி செபமாலை சொல்லுவோம். மரியாள் மணமாகாமலே தாயாக வேண்டுமென்பது இறைவன் வகுத்த நியதி அவள் மறுப்பேதும் கூறவில்லை சட்டம் பேசவில்லை. "இதோ ஆண்டவருடைய அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று இறைசித்தத்திற்கு பணித்தவள். மாதா தூய ஆவியின் அருட்பொழிவை முழுமையாகப் பெற்று ஆண்டவர் இயேசுவை தன் உதரத்தில் தாங்கி நமக்கு ஆலயமாய் இருக்கின்றார். இயேசுவின் பிரசன்னமும் பரிசுத்த ஆவியின் நிறைவும் தேவ அன்பை அவரிடம் ஊற்றுகின்றது. எனவே இறைவனின் பிரசன்னத்தை முழுமையாகப் பெற்ற அவள் மனித நேயம் நிறைந்தவளாய் தியாக அன்பை சுமந்தவளாய் மக்களை தேடிநன்மை செய்பவளாய் விளங்கினாள். நாமும் அன்னையின் சாயலைப் பெற்றவர்களாக வாழ அன்னையின் இந்த விசேட நாளில் அன்னையிடம் வரம் வேண்டி பணிவோம். மேன்மைமிகு மே மாதத்தில் மரியின் அடைக்கலத்தை மனமுவந்து தேடுவோம். நம் கிறிஸ்தவ வாழ்விற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் மரியாவின் வாழ்வையும் ஆன்மீகத்தையும் ஏற்று வணக்க மாதத்தை தொடர்ந்து சிறப்பிப்போம்! மரியாவை நம் தாயாக ஏற்று வணங்கி வாழ்த்திப் பாராட்டுவோம்! இயேசுவின் விருப்பத்தை அதன் வழியாக நிறைவு செய்வோம்.

## செபமாலையின் வரலாறு

தொடக்ககால திரு அவையின் தொடக்கத்திலிருந்தே திருத்தூதர்களும், இதர நம்பிக்கையாளர்களும் கர்த்தர் கற்பித்த செபத்தையும், அருள்நிறை மரியே என்ற வானதூதரின் வாழ்த்துச் செபத்தையும் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால் இன்று செபிக்கும் கன்னிமரியின் செபமாலையை கிபி 1214ல் தான் புனித தோமினிக் வழியாக அன்னை மரியாள் திரு அவைக்கு வழங்கினார். அக்காலத்தில் ஆல் பிஜென்சியன்ஸ் என்ற



முரண்பாட்டுக் கொள்கையினர் மனம் மாறித் திரு அவைக்குத் திரும்பி வரவேண்டுமென்று புனித தோமினிக் அவர்களுக்காகச் செபித்து வந்தார். பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு காட்டுக்குள் சென்று பாவிகள் மனந்திரும்ப வேண்டி செபித்தார். அப்பொழுது அன்னை மரியாள், புனித தோமினிக்குக்கு காட்சி தந்து எதிரிகளை, முரண்பாட்டுக் கொள்கையினர் களைப், பாவிகளை முறியடிக்கும் ஒரே கருவி செபமாலை என்று சொல்லி செபமாலையை எப்படி செபிப்பது என்று கற்றுக் கொடுத்தார்.

அந்த நாளிலிருந்து தனது வாழ்நாள் முழுவதும் புனித தோமினிக் செபமாலையின் புகழையும், பெருமையையும் தனது மறையுரைகளின் வழியாகப் போதித்து அறிக்கையிட்டு வந்தார். செபமாலையின் மகிமையைப்பற்றி அன்னை மரியாள், பலருக்குத் தோன்றி விளக்கியுள்ளார்கள். இவ்வாறே இன்று நாம் செபிக்கும் செபமாலை தோற்றம் பெற்றது.

## நினைவஞ்சலி

கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர் நற்பேறு பெறுவார்" (நீ. மொ 28:14)

| | |
|---|---|
| திரு. எரிக் எல்டன் | திருமதி. கிறிஸ்டினா போச்சூன் எல்டன் |
| விண்ணக வாழ்வில் | விண்ணக வாழ்வில் |
| இருபத்து நான்கு வருடங்கள் | பன்னிரண்டு வருடங்கள் |
| 23.01.1998 | 23.05.2010 |



பாசம் சொரிந்து பாரினிலே எம்மை உயர்த்தி துன்பம் தெரியாமல்
துணையாய் இருந்தீர்கள் உங்கள் அன்பை இழந்து ஆண்டுகள் பல
சென்றாலும் நாம் வாழும் காலம் எல்லாம் நீரும் உங்கள் நினைவலைகள்,
ஆன்மாக்கள் சாந்திபெற அனுதினமும் வேண்டுகின்றோம்.



உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

குற்றம் காணத் தொடங்கினால் அன்பு செய்ய நேரம் இருக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆக்னஸ் கோன்ஸா பொஜனாக்கா என்னும் இயற்பெயரைக் கொண்ட அன்னை தெரேசா 1910ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் திகதி தந்தை நிக்கல் நிகோலா மற்றும் தாய் பொயாஜியூ திரானி பெர்னாயின் என்போருக்கு மூன்றாவது குழந்தையாக தென்கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியாவில் பிறந்தார். சிறுவயிதலிருந்தே கிறிஸ்தவ மறைபணியாளர்களாலும், அவர்களது சேவைகளாலும் கவரப்பட்ட அன்னைத் தெரேசா தனது 12வது வயதில் சமூக சேவையில் ஈடுபட ஆரம்பித்தார். இதன் மூலம் அவர் துறவறம் புக முடிவு செய்தார். தனது 18 வது வயதில் வீட்டை விட்டு வெளியேறி Sodality of Chidren of Mary என்ற அமைப்பை சேர்ந்த லொரேட்டோ சகோதரிகளின் சபையில் தன்னை பணியாளராக இணைத்துக் கொண்டார். பிறகு 1929ம் ஆண்டு முதல் முறையாக இந்தியாவின் மேற்கு வங்கத்தில் உள்ள கத்தோலிக்க திரு அவைக்குக்கு வந்தார்.

## வரலாற்றை ஆக்கியோர் – 04



## அன்னை தெரேசா

பள்ளிக்கூடத்தில் பயிற்றுவிப்பதை தெரேசா விரும்பினாலும் கல்கத்தாவில் அவரைச் சூழ்ந்தள்ள பகுதிகளில் வறுமை நிலை அவரை அதிகமாய் கலங்கச் செய்தது. 1948ஆம் ஆண்டில் ஏழைகளுடனான தனது சேவையை ஆரம்பித்தார். துறவற சபைகளின் உடைகளைக் களைந்து. நீல கரையிடப்பட்ட சாதாரண வெண்ணிற பருத்தி புடவையை அணிந்தவராய் இந்திய குடியுரிமையினைப் பெற்றுக் கொண்டு குடிசை பகுதிகளுக்கு சேவை செய்தார். தீண்டாமை, தொழுநோய் என்பன மக்கள் வாழ்வை கடுமையாக்கியது. ஆனால் தொழு நோயாளர்களை தொட்டு தூக்கி மறுக்கப்பட்டவர்களை அன்போடு அரவணைத்தார். சிறைக்கைதிகளுக்கும் போதைப் பழக்கத்திற்கும் அடிமையானவர்களுக்கும் போதிய உதவிகளைச் செய்து வந்தார். 1950ல் அக்டோபர் 7ஆம் திகதி பிறர் அன்பின் பணியாளர் சபையை மறைமாவட்ட அளவில் துவங்க தெரேசாவுக்கு கத்தோலிக்க திரு அவையில் அனுமதி அளிக்கப்பட்டது. அச்சபையின் குறிக்கோளாக அவர் கூறியது. "உண்ண உணவற்றவர்கள். உடுத்த உடையற்றவர்கள். வீடற்றவர்கள். முடமானவர்கள். குருடர்கள். தொழு நோயாளிகள் போன்றோர்களையும், சமூகத்திற்கு பெரும் பாரமென்று எண்ணப்பட்டு அனைவராலும் புறக்கணிக்கப்பட்டவர்களையும் கவனித்தலே ஆகும். கொல்கத்தாவில் 13 உறுப்பினர்களையே கொண்ட சிறியதொரு அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இச்சபை இன்று 6000க்கும் மேலான அருட்சகோதரிகளால் நடாத்தப்பட்டுவருகிறது. இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் "பிறர் அன்பின் பணியாளர்கள்" சேவையை விரிவுபடுத்தினார். இதன் விளைவாகப் பல நாடுகளிலும் சேவை மையங்களை நிறுவி உதவினார்.அன்பின் இலக்கணமான அன்னை தெரேசா 1977ல் இவ்வுலகை விட்டு நீங்கினார். மறைந்தும் மறையாமல் வாழும் அன்னைத் தெரேசா என்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார்.

# திருகோணமலை மறைமாவட்ட மரியாயின்சேனை பக்தி சபையின் வருடாந்த தவக்கால தியானம்

பக்தி முயற்சிகள், ஆன்மீக முயற்சிகள் ஒரு மனிதனை பெலப்படுத்துகின்றன, நல்வாழ்விற்கு இட்டுச்செல்கின்றன. அவ்வகையில் திருகோணமலை மறைமாவட்ட மரியாயின் சேனை பக்தி சபையின் வருடாந்த தவக்கால சிலுவைப்பாதை யாத்திரை திருகோணமலை மறைமாவட்ட மரியாயின்சேனை ஆன்மீக இயக்குனர் அருட்பணி பா. ஜெயபாலன் அ.ம.தி அடிகளாரின் வழிநடத்தலுடனும் பங்குபற்றலுடனும் இம்முறை கும்புறுபிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் 17.03.2022ம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது.

மனமாற்றத்தின் காலமான இத்தவக்காலத்தில் சிலுவைப்பாதையுடன் ஆரம்பமான இத்தியானம் அருட்பணி. S.R ஜெரெட்ணம் அடிகளாரின் ஒப்புரவு அருட்சாதனத்துடனும் திருப்பலியுடனும் பிப 1.30 மணிக்கு நிறைவடைந்தது. இதற்கான சகல ஆயத்தங்களையும் நிலாவெளி பங்குத்தந்தை அருட்பணி. அன்ரூ ஸ்ரீபன் அடிகளார் மேற்கொண்டதுடன் பங்குபற்றிய அனைவருக்கம் மதிய உணவும் அவரால் ஒழுங்கு செய்யப்பட்டது. பல ஆன்மீக தாகங்களை தீர்த்த இத்தியானம் பலருக்கு பயனுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் காணப்பட்டது. இதில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகள்







தகவல் : வேஜின் டி குரூஸ்
தலைவி.

## அருட்பணி G. நிதிதாசன் அடிகளாரின் பணிவாழ்வில் அழியாத சில தழும்புகள்

தொடர்ச்சி...

நிமிர்ந்த நடை, நேரிய பார்வை நிதானமான செயற்பாடு, நேர்த்தியான பணிகள் தந்தையிடம் கண்டு கொண்டவை. சிறுவர் முதல் முதியோர் வரை அனைவரையும் அவரவர் நிலைக்குத் தானும் சென்று நேசிக்கும் பரிவு காட்டும் நற்பண்பு மிக்க மா மனிதர். சிறந்த செயல்வீரன் எப்பணியையும் செவ்வனே செய்வதில் தளராதவர் எம் தந்தையின் சிறப்பும் இதுவே. பாலர் சபை முதல் பீடப்பணியாளர் மறைக்கல்விப் பணிகள், வளர்ந்தோர், பங்கின் மூத்த பிரஜைகளை ஒன்று சேர்த்து "முது கனி அவை" எனும் முதியோர் அமைப்பினை அன்புவழிபுரத்தில் ஆரம்பித்து அவர்களையும் அங்கீகரித்த பணியாளர். பார்வையில் சாது, பணிகளிலும் பக்குவம், பாசத்தின் தந்தை, பழிபாவத்திற்கு பயந்தவர் பணிவாழ்வில் சவால்களில் சாது மிரண்ட சந்தர்ப்பங்களையும் நாம் கண்டோம். ஆனாலும் அதுவும் கணப்பொழுதே எல்லோரையும் ஏற்று நடத்தல், எல்லோருக்கும் செவிமடுத்தல் இன்ப துன்ப நிகழ்வுகளில் முதல் ஆளாக நிற்றல் இதுவெல்லாம் இவரின் சில இயல்புகள்.

பங்கு மக்களின் கரிசனை, தனிப்பட்ட மட்டுமல்ல குடும்பங்களில் உள்ள ஒவ்வொருவர் பற்றியும் அறிதல், ஆலோசனை வழங்கல், கல்வி கற்பதற்கு பிள்ளைகளை தட்டடிக் கொடுத்தல், பாராட்டுதல், பரிசு வழங்கல், பரிதவிக்கும் பிள்ளைகளை பராமரித்தல், நல்வழிகாட்டும் சிறந்த மனிதர் பங்கில் ஏவராவது சுகயீனமுற்றதை அறிந்து கொண்டால் பதறிக் கொண்டு அந்த இடத்தில் பிரசன்னமாவார். வைத்தியசாலையில் ஒருவரைப் பார்க்கச் சென்றால் ஒவ்வொரு விடுதிக்குச் சென்று பலரைப் பார்வையிட்டு திருப்தியடையும் பணியாளர் 'Blessing' போவது அருட்தந்தைக்கு அலாதிப்பிரியம் அதுமட்டுமல்ல ஆத்ம திருப்தி. பிறந்த நாள், திருமண ஆண்டு நினைவு நாள், இறப்பு நினைவு நாள் இவைகளில் இவரது பிரசன்னம் இருக்கும் பங்கில் மட்டுமல்ல தம்மை நாடி வரும் எல்லோர் நலனிலும் அக்கறை காட்டும் பரோபகாரி மறைமாவட்ட நிகழ்வுகளின் போது மறைக்கோட்ட முதல்வராக, பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனராக, பரிணமித்த தந்தையே பாதி வழியில் பரமன் உம்மை அழைத்தாரே பாவிகளாம் நாம் பரிதவிக்கின்றோம். பரமனின் திட்டத்தை குறை சொல்வதா? பக்குவமாய் உம் இழப்பை ஏற்றுக் கொள்வதா? பரகதியில் பரமனுடன் வீற்றிருக்க பாரினில் இருந்து வேண்டுகின்றோம் தந்தையே.

திருமதி ஜேம்ஸ் லெப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு தான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீ தான்

# புனித லூக்க நற்செய்தி 05 – 08 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=

### கேள்வி பதில்

1. "அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய் என்று எப்பொழுது இயேசு சீமோனுக்குக் கூறினார்?

விடை :...........................................

2. அஞ்சாதீர் நம்பிக்கையோடு மட்டும் இரும். அவள் பிழைப்பாள் என்று இயேசு யாரிடம் கூறினார்?

விடை :...........................................

3. "ஆண்டவரே, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்று இயேசுவிடம் மன்றாடியவர் யார்?

விடை :...........................................

4. உங்கள் உள்ளங்களில் நீங்கள் எண்ணுகிறதென்ன? என இயேசு யாருக்குக் கூறினார்?

விடை :...........................................

5. "ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே" என்று இயேசு யாருக்குக் கூறினார்?

விடை :...........................................

### சரி, பிழை எழுதுக.

6. நூற்றுவர் தலைவனின் பணியாளர் குணமடைந்தது கப்பர்நாகுமில் ( )
7. ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக்கொண்டோரின் செயல்களே சான்று. ( )
8. உண்டு கொழுத்திருப்போரே, ஏனெனில் துயருற்று அழுவீர்கள் ( )
9. சில விதைகள் வழியோரம் விழுந்து மிதிபட்டன. முட்செடிகள் அவற்றை நெருக்கி விட்டன. ( )
10. "மகளே உனது நம்பிக்கை உன்னை நலமாக்கியது ( )

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

11. ______________ கேட்டு அதன்படி செயல்படுபவர்களே ______________ ______________ ஆவார்கள்.
12. மனிதராய்ப் ______________ ______________ பெரியவர் ஒருவருமில்லை.
13. நல்லவர் ______________ நல்ல ______________ நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர்.
14. ______________ அல்ல ______________ மனம் மாற அழைக்க வந்தேன்.
15. உங்கள் தந்தை ______________ இருப்பது போல நீங்களும் ______________ ______________ இருங்கள்.

பெயர் :...........................................

முகவரி :...........................................

பங்கு :...........................................

முடிவுத்திகதி 08.07.2022

# ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 50 திருப்பாடல் 91 – 120 அதிகாரங்கள்

1. எதனை மீட்டி ஆண்டவரைப் புகழ்தேத்துங்கள்?

விடை :...........................................

2. "எந்த வாயினின்று" என்னை விடுவித்தருளும்?

விடை :...........................................

3. யார் மீது நம்பிக்கை வைப்பதை விட, ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம்?

விடை :...........................................

4. எவ்வாறு ஆண்டவரை வழிபட வேண்டும்?

விடை :...........................................

5. யாரை நன்மையால் நிரப்பினார்?

விடை :...........................................

6. மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர் என்ன அடைவர்?

விடை :...........................................

7. ஆண்டவர் வல்லமையை எவ்வாறு கொண்டுள்ளார்?

விடை :...........................................

8. அவர் வானகத்தையும், வையகத்தையும் எப்படி பார்க்கின்றார்?

விடை :...........................................

9. எது அவரது அரியணையின் அடித்தளம்?

விடை :...........................................

10. எது "உமது கூடாரத்தை" நெருங்காது?

விடை :...........................................

11. ஆண்டவரைப் பற்றிய அச்சமே எதன் தொடக்கம்?

விடை :...........................................

12. பேரீச்சை மரமெனச் செழித்தோங்குபவர் யார்?

விடை :...........................................

13. உம் திருச்சட்டம்படி நடக்க எனக்கு "என்ன" தாரும்?

விடை :...........................................

14. எதனால் என் முழங்கால்கள் தளர்வுறுகின்றன?

விடை :...........................................

15. அடிமையாக விற்கப்பட்டவர் யார்?

விடை :...........................................

பெயர் :...........................................

முகவரி :...........................................

தரம் :...........................................

பங்கு :...........................................

முடிவுத்திகதி 08.07.2022

தன்னடக்கத்துடன் இருந்தால் பாராட்டு மற்றும் அவமானம் இவ்விரண்டும் உங்களைப் பாதிக்காது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

**1ம் பரிசு - 500/-** **2ம் பரிசு - 300/-** **3ம் பரிசு - 200/-**

பெயர் :........................................................................

முகவரி :........................................................................

தரம் :........................................................................

பங்கு :........................................................................

முடிவுத்திகதி 08.07.2022

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 41
## நீதிமொழிகள் ( 1 - 3 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | | | | | | ■ | கு | | |
| | ப | | | | | து | | | |
| | | ■ | உ | ■ | ஞா | | | | |
| | | | | | | | | | சா |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| ■ | | | | | | | | | |
| ■ | | மெ | | செ | ■ | | | | |
| | | | | | | நி | | ஆ | மு |

1. சா........ மோ........
2. ந........ ........ழி........ ........ள்
3. குர........ழு........புகி ........ ........து
4. உ........ல் வீ........கள்
5. ஆ ........ ........வரு........கு........ஞ்சி
6. செ ----- -----றி -----ல்
7. ஞா........ ........தை ........டி
8. து........ செ ........ ........
9. ந........ ........ ரின்........றி
10. நி........த்தி........ ........பார்
11. நிலை........ ........ந........ன்
12. செ........ ........ய்க்........
13. மு........ற்........லன்
14. ப........ ........க்........ள்வோர்

பெயர் :........................................................................

முகவரி :........................................................................

பங்கு :........................................................................

முடிவுத்திகதி 08.07.2022

### சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்



**பங்குபற்றியவர்கள் - 18 சிறார்கள்**

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/= ரூபா
செல்வி. ஷத்விகா கேஜீயுகன்
பொற்கேணி
தம்பலகமம்

2ம் பரிசு 300/= ரூபா
லீ. புமேஷியன்
இக்பால் வீதி
மூதூர் - 07

3ம் பரிசு 200/= ரூபா
G.M. லோறன் ஜோர்ஜ்
இல: 24. இமாம் வீதி
சீனக்குடா

### புனித மாற்கு நற்செய்தி அதிகாரம் 8 - 12 வரை போட்டி முடிவுகள்

**பங்குபற்றியவர்கள் : 33 பேர்**


**மிகச் சரியாக விடையளித்தோர்: 22**

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/= ரூபா
அன்ரன் ஜெகிஷன் சசிகலா
6ம் கட்டை, கப்பல்துறை
தம்பலகமம்

2ம் பரிசு 300/= ரூபா
ப. மெறின்
வண்ணாங்குளம்
முல்லைத்தீவு

3ம் பரிசு 200/= ரூபா
வெ. பெனடிக்ஷன்
5ம் வட்டாரம்
கும்புறுபிட்டி



### ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர்போட்டி - 47 திருப்பாடல் 1 - 30 அதிகாரம்

**பங்குபற்றியவர்கள் : 22 குட்டீஸ்**

**மிகச் சரியாக விடையளித்தோர்: 14 குட்டீஸ்**

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/= ரூபா
கேஜீயுகன் ஸத்விகா
இல: 755, பொற்கேணி
தம்பலகமம்

2ம் பரிசு 300/= ரூபா
வெ. ஆண்டிலக்ஷிகா
5ம் வட்டாரம்
கும்புறுபிட்டி

3ம் பரிசு 200/= ரூபா
அ. அபிலாசினி
6ம் கட்டை, கப்பல்துறை
தம்பலகமம்

### வாழ்வு மேலோங்கவே கவிதை வரிகள்

**பாராட்டிற்குரியவர்கள்**



செல்வி. **P.** கொன்சலா
இல: 125, உட்துறைமுக வீதி
உவர்மலை

தியானா தீபன்
வித்தியாலயம் வீதி
பேராலயம்


சகாயமேரி
சாம்பல்தீவு



**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்ட திருச்சிலுவைப்பாதை 2022
## நாச்சிக்குடா (சீனக்குடா)


திருகோணமலை மறைமாவட்டத்தின் சீனக்குடா பங்கிற்குட்பட்ட நாச்சிக்குடா சிலுவைமலையில் இவ்வாண்டிற்கான மறைமாவட்ட திருச்சிலுவைப்பாதையானது 02.04.2022 அன்று ஆயர் அதி.வண. கி. நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் குருக்கள், துறவிகள், இறைமக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. சீனக்குடா பங்குத்தந்தை அருட்பணி. ஜோர்ஜ் திசநாயக்க அவர்களின் அயராத உழைப்பில் வளர்ச்சி பெற்றுவரும் கல்வாரித்தலத்திற்காக மலையடிவாரத்தில் ஓர் சிற்றாலயமும் அமைக்கப்பட்டு அன்றைய நாளில் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மறைமாவட்ட அருங்கொடைப்பணியகத்தின் ஏற்பாட்டில் தவக்கால சிறப்பு ஆராதனை – பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில்






26.03.2022 சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் 08.30 மணி வரை பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில் மறைமாவட்ட தவக்கால ஆராதனை நடைபெற்றது. இவ் ஆராதனை நிகழ்வானது மறைமாவட்ட ஆயரின் தலைமையில், அருட்பணியாளர்களான B. போல் றொபின்சன், S. மதுராங்கன் குரூஸ், X.I. ரஜீவன் அவர்களும் வழிநடத்தினார்கள். இவ் ஆன்மீக ஆராதனையில் இறைமக்கள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

தகவல்: அருட்பணி S. மதுராங்கன் குரூஸ்,
இயக்குனர், அருங்கொடைப் பணி, ஆயர் இல்லம், திருகோணமலை.

# திருத்தைலம் மந்திரித்தல் திருப்பலி

கடந்த 11.04.2022 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கிறிஸ்மா தைலம் மந்திரித்தல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதற்கு திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், இறைமக்கள் கலந்து



சிறப்பித்தனர். ஆயர் தமது மறையுரையில் குருத்துவத்தின் தனித்தன்மையையும், குருக்கள் பிழை செய்தால் இறைமக்களாகிய நீங்கள் அதனை தட்டிக்கேட்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். குருத்துவத்தை மேன்மைப்படுத்தும் நிகழ்வாக ஆயர், குருக்களுக்கு இறைமக்களால் சிறு அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.



# ஓராண்டு நினைவஞ்சலி

உயிர்தெழுதலும் வாழ்வும் நானே,
என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பிலும் வாழ்வார்.
உயிரோடு இருக்கும் போது
என்னிடம் நம்பிக்கை கொள்ளும்
எவரும் என்றுமே சாகமாட்டார்.
(யோவான் 11:25–26)



**மலர்வு** - 04/10/1953
**உதிர்வு** - 08/05/2021

என்றும் புன்னகையுடன்
ஏணி போல் எம்மை உயர்த்தி
அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்பு டடாவே
உம் ஆன்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அமரர்.**
**லெனாட் பிராங்கிளின் டீ சௌசா**

குடும்பத்தினர்
இல. 508, அன்புவழிபுரம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org